விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி 23 சனிக்கிழமை (07.01.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 19

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## இராணுவத் தளபதி வவுனியா விஜயம்

(வவுனியா)

இராணுவத்தளபதி சரத்பொன்சேகா நேற்று வவுனியாவுக்கு விஜயம்மேற்கொண்டார். உலங்கு வானூர்தியில் வவுனியாவுக்குச் சென்ற அவரை வன்னி இராணுவத்தளபதி உபாலி எதிரிசிங்கவினால் வரவேற்கப்பட்டார்.

வன்னி இராணுவ முகாம்களிலுள்ள அதிகாரிகளுடன் சுமார் ஒரு மணிநேரமாக இராணுவத் தளபதி ஆலோசனை நடாத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

வன்னி ஜோசப் முகாமில் நடைபெற்ற இச் சந்திப்பில் இராணுவத்தினரின் பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து ஆராயப்பட்டதாக செய்திகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் தாக்குதல்களால் மரண பீதியில் யாழ்ப்பாண மக்கள்

### க.கா.குழுவிடம் இளம்பரிதி சுட்டிக்காட்டு

(பளை)

யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மற்றி வெய்னியொன்பா, கடல் கண்காணிப்புக்குழுவின் பிரதி தலைவர் லாஸ் பிளேய்மன் ஆகியோருக்கும், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, ஊடக இணைப்பாளர் இ.இமையவன் ஆகியோருக்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று



முற்பகல் 11 மணிக்கு பளையில் உள்ள யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தில் நிலவும் நிலைமைகள் குறித்து இக் கலந்துரையாடலில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தினதும் உயர் படை அதிகாரிகளதும் ஒப்புதலுடனும் படையினர் மேற்கொள்ளும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நகரசபை ஊழியர் வெட்டிக்கொலை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையின் பொது நூலகத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் இனந்தெரியாதோரால் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று காலை அவரது சடலம் தும்பளை மதவடிச் சந்தியில் கண்டெடுக்கப்பட்டது. பருத்தித்துறை பொது நூலகத்தில் கடமையாற்றும் தும்பளையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான தபேந்திரன் மதன் (வயது 28) என்பவரே வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு தனது கடமையை முடித்துக் கொண்டு வீட்டிற் (12 ஆம் பக்கம் பார்க்க)


# புலிகளை பேச்சு மேசைக்கு அழைக்குமாறு அமெரிக்காவை வலியுறுத்துகிறது அரசு

## றொக்காவுடனான சந்திப்பில் விளக்கினார் மங்கள

(வாஷிங்டன்)

சமாதானப் பேச்சுக்கள் கடந்த இரண்டு வருடங்களாக முடங்கிக்கிடக்கின்றன. அரசாங்கத்துடன் நேரடிப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க விடுதலைப்புலிகளை இணங்க வைக்கவேண்டும். அதற்காக அமெரிக்க அரசு விடுதலைப்புலிகளை வலியுறுத்த வேண்டுமென இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்கா சென்றிருக்கும்



வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீர நேற்று முன்தினம் அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டலிஸா றைஸை வாஷிங்டனில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனதாக கூறப்படும் ஏழுபேர் காங்கேசன்துறையில் !

### இதுவரை 30 பேரைக்காணவில்லையென முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒரு மாதகாலப் பகுதியில் 30 பேர் காணாமல் போயுள்ளனர் என மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.இணைப்பதிகாரி தெரிவித்தார்.

இவர்களில் நான்கு பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் நால்வர் மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இதேவேளை காணாமல் போனதாகக் கருதப்படும் 7பேர் காங்கேசன்துறைப் பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பொலிஸாரின் அழைப்பின் பேரில் அவர்களை அங்கு சென்று தான் பார்வையிட்டதாக இணைப்பதிகாரி தெரிவித்தார்.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு ;

நெல்லண்டை தும்பளையைச் சேர்ந்த மார்க்கண்டு திருநீலன் (வயது 18) தும்பளையைச்சேர்ந்த தர்மராசா குகதாஸ் (வயது 31) கரவெட்டியைச் சேர்ந்த புலேந்திரன் நாகேந்திரன் (வயது 23) பருத்தித்துறையைச் சேர்ந்த வர்களான சோமசுந்தரம் சாந்தகுமார் (வயது 28) ஜோர்ஜ் றெ மோடி (வயது 41) பி.கமலக்கண்ணன் (வயது 25) பத்மநாதன் மனோகரன் (வயது 31) ஆகியோரே காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ச-39)

## தமிழர்கள் கைதாவதைக் கண்டித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கைதுசெய்யப்படுவதைக் கண்டித்து நேற்று பிற்பகல் 3மணியளவில் கொழும்பில் பாரிய கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கொழும்பு நகரின் கிராண்ட்பாஸ் சந்தியில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.முதல் பொலநறுவை வரையிலுள்ள விடுதலைப்புலிகளை அழித்துவிட முடியும்

### முன்னாள் இராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

மட்டக்களப்பு முதல் பொலநறுவை வரை உள்ள ஆயிரத்து 500 விடுதலைப்புலிகளையும் அழித்துவிடும் சக்தி எமது இராணுவத்திற்கு உண்டு என முன்னாள் இராணுவப் பேச்சாளரும் 23 வது படைப்பரிவு அதிகாரியுமான பிரிகேடியர் தயாரத்திநாயக்க தெரிவித்துள்ளார்.

மன்னம்பிட்டிய கலாசார நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக விளக்கமளித்து பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சமாதானம் நிலவிய கடந்த 4 வருடகாலத்தில் இராணுவம் 100 சதவீதம் யுத்த நிறுத்த உடன்படிக்கையை காத்துள்ளது. மட்டக்களப்பு அம்பாறை, வாகரை, பொலநறுவை உட்பட்ட பிரதேசங்களில் 1200-1500 வரையிலான விடுதலைப்புலி உறுப்பினர்களே உள்ளனர்.


இந்த சொற்ப எண்ணிக்கையானது எமது பெரும் படையுடன் பார்க்கும்போது மிகக்குறைவானதே. தாக்குதல் நடத்தும் எண்ணத்துடன் அவர்கள் வருவார்களாயின் அந்த அனைத்து விடுதலைப்புலி உறுப்பினர்களையும் அழித்துவிடும் சக்தி இராணுவத்திற்கு உள்ளது.

புதிய ஜனாதிபதியின் புதிய செயற்திட்டங்களின் கீழ் இராணுவம் உட்பட பாதுகாப்புப் பிரிவினருக்கு புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளது. புதிய சக்தி கிடைத்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கு இது பெரும் சவால். இதனால் அவர்கள் மனோரீதியாக விழுந்துள்ளனர்.

அவர்களில் சிலர் கிராமங்களுக்குள் வந்து குழப்பகரமான நிலையை ஏற்படுத்தி பாதுகாப்பு நடவடிக்கைகளில் தடங்கலை ஏற்படுத்த முயல்கின்றனர் என அவர் தெரிவித்தார். (ச)

# "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்"

அன்பு என்றால் என்ன? எது அன்பு? அன்பு பற்றிச் சாதாரண வாழ்வில் பல தடவை பேசுகிறோம் பேசப்படுவதைப் பார்க்கிறோம். பல நிகழ்வுகளை எண்ணங்களை அன்பானவை என்று கருதுகிறோம்.



ஆனால் அன்பு என்றால் என்ன எனப் புரிந்துகொள்ள நாம் என்றுமே முயல்வதில்லை. நான் உங்களில் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன். எவ்வளவு கஷ்ரப்பட்டு உங்களை வளர்த்தேன். நீங்கள் இப்போது என் சொல்லைக் கேட்பதில்லை. என் விருப்பப்படி நடப்பதில்லையே எனத் தாய் பிள்ளைகளிடமும் "நான் உங்கள் மேல் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறேன். ஆனால் நீங்கள் என்னைப் புரிந்து கொள்வதில்லையே" என மனைவி கணவனிடமும் பலவாறு பேசப்படக் காண்கிறோம். அன்பு என்பதை "நாம் இது செய்தால் அன்பு செய்வேன் என நிபந்தனை அடிப்படையிலேயோ அன்றி நீ அன்பாய் இல்லாவிட்டால் அல்லது அன்பாக இருப்பதாகக் காண்பித்து கொள்ளாவிட்டால் உனக்கு இவற்றைச் செய்யமாட்டேன் என அச்சப்படுத்தியோ பெற முயல்கிறோம். மேலும் நான் உங்களில் அன்பு என்பதால் நான் கூறியவாறு நீங்கள் வளர வேண்டும் என்று உரிமை பாராட்டுவதாயோ உடமை கொள்வதாயோ கருதுவதை அன்பு என எண்ணுகிறோம்.

## அன்பெனப்படுவது......

உண்மையில் அன்புக்கு மன நிலையில் சமநிலையைப் பேணும் சக்தியுண்டு அன்பு செய்யப்படுவதால் மனநலனை மாத்திரமல்ல உடல் நலனையும் பேணமுடியும். உளவியலாளர்கள் குழந்தை கருவாக வயிற்றில் இருக்கும்போதே அது நேசிக்கப்படுகிறதா இல்லையா என்பதைப் பொறுத்து அதன ஆழுமை பிற்காலத்தில் தீர்மானிக்கப்படும் எனக் கருத்து தெரிவிக்கின்றனர்.

அன்பு செய்யப் படுவோருக்கு நம்பிக்கையைக் கொடுககும் உலகு பற்றியும் வாழ்வு பற்றியும் ஆரோக்கியமான பார்வை யைத் தரும் மாற்றத்தைத் தரும் அதே நேரம் அன்பு, தோல்வி, துன்பம் தராமல் இருக்கவேண்டுமாயின் அந்த அன்பு எத்தகையதானதாக இருக்கவேண்டும் என்பதை டாக்டர் ஹேரிஸ்டாக்கலிவான் பின்வருமாறு கூறுகிறார்.

"மற்றவரின் மனத் திருப்தி, பாதுகாப்பு வளர்ச்சியானது நமது மனத்திருப்தியாக நமது பாதுகாப்பாக, நமது வளர்ச்சியாகமாறு கிற போது அங்கு அன்பு நிலைக்கின்றது. துன்ப மில்லாமல் இருக்கிறது.

கொள்கை அளவில் மற்றவர்களில் அக்கறையும், செயல் அளவில் பார்த்தால் மற்றவருக்காக எம்மைத் தியாகம் செய்யத் தயாராக இருந் தாலும் அன்பாகும். உண்மையான அன்பு நிபந்தனை அற்றது. அன்பு செய்யும் அளவு செய்யப்படவும் வேண்டும். ஏனெனில் செய்வதால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய மீளப் பெற மேலும் அன்பு செய்யப்படுபவரை ஏற்றுக்கொள்வது உடமையாக்கிக்கொள்வதன்று எம்மைப் பற்றிய சரியான புரிந்துணர்வு எம்மிடம் இருப்பின் மற்றவரைச் சரியாகப் புரிந்துகொள்ளமுடியும். அவ்வாறு இல்லாத போது சிக்கல் உருவாகும்.

## குழந்தையும் அன்பும்

தனிமனிதத் தன்மை அன்பு செய்யப்படுவதாலேயே உணரப் படுகிறது குழந்ஷத மீது நாம் அன்பு காட்டும்போது தன்மீது அன்பு காட்டப்படுவதாய் குழந்தை உணரும் அவ்வாறு உணரும்போது தானும் அன்புடையவன் என்பது அறிகிறது. பிறரின் அன்பை விரும்பத் தான் மற்றவரை அன்புசெய்யும். சரியான அன்பைப் பெறாத பிள்ளை வாழ்க்கையில் பின்வரும் காலங்களில் மற்றவர்களைச் சந்தேகிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனனுடன் பேசுபவரை சந்தேகிக்கும். இது அந்தக் குழந்தையினுள் உருவாகியுள்ள அவனம்பிக்கையின் வெளிப்பாடாகும். சிலவேளை உண்மையான அன்பைக்கூட சந்தேகிக்கும்.

அச்சம், அன்பு இல்லை, சார்பு நிலை அன்பு இல்லை எனது என உருமை பாராட்டுவதும், ஆதிக்கம் செய்வதும் அன்பு ஆகாது பொறுப்புணர்வு, கடமையுணர்வு அன்பாகாது. தன்னிரக்கம் அன்பாகாது. இவை அனைத்தையும் நீக்கினால் அது அன்பு என்ற கேள்விக்கு ஜே.கிருஷ்ணமூர்த்தி அது உள்நோக்கம் இல்லாத மன எழுச்சி பொங்கிவரும் ஆர்வம் கடமையினாலேயோ பற்றுதனாலேயோ விளைகின்ற ஆர்வம் அன்று காம உணர்வினால் ஏற்படுகின்ற ஆர்வமும அன்று. தன்னலத்தை முற்றாக கைவிடும்போது அங்கே அன்பு தோன்றும் என்றார். இன்னும் தெளிவாக 'தான் என்பதை முழுமையாக கைவிடும் சந்தர்ப்பங்களில் அன்பை அறிந்து கொள்ளலாம்' என்றார்.

அன்ப பற்றி ரில்க் என்ற உளவியலாளர் பின்வருமாறு கூறுகிறார். அன்பு என்பது ஒருவரை முழுமையாக வளர்ச்சியடையச் செய்யும் தூண்டுதலாகவும், மற்றவர்களின் விருப்பத்திற்காக தன்னை மாற்றும் ஊக்கியாகவும் ஒரு நல்ல நபராக மாற்றவும் உதவுகிறது. மேலும் அன்பு தன்னை விட்டு வெளிவரவும் வேண் டுகோள் விடுக்கிறது.

இரண்டு தனி நபர்கள் ஒருவருக்கொருவர் பாதுகாப்பாக இருப்பதிலும் தொட்டுணர்ந்து பேணுவதிலும் அன்பு அடங்கியுள்ளது என்றார்.

## பெண்களும் அன்பும்

பெண்கள் தமது உடலின் உயிரியல் அமைப்புக் காரணமாக அன்பை அதிகம் எதிர்பார்ப்பவராக இருக்கின்றனர். எந்தக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. அதிகமான பெண்கள் தாம் விரும்பும் ஆண்கள் தம்மை விட்டு விலகிவிடுவர் என்ற பயம் கொண்டவராயும் மிக அரிதாகவே ஆண்கள் தாம் விரும்பும் பெண்கள் தம்மை விட்டு விலகிவிடுவார்கள் என்று எண்ணுவதாகவும் உளவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதற்கான பின்னணிக் காரணத்தை நோக்குவோமாயின் பெணகளின் அடிமனதில் காணப் படும் பாதுகாப்பற்ற உணர்வே இதற்கு காலாக இருக்கின்றது.

சிந்தனையில் "ஆளுமை வெளிப்பாட்டில் ஆண்களுக்கும் பெணகளுக்கும் காணக்கூடிய வேறுபாடு பற்றியும் அதற்கான காரணம் பற்றியும் நாம் பார்ப்போமானால் ஸிக்மன் பிரெய்ட் முன்வைத்த உடலியல் சார்ந்த உடலியலுக்கு அப்பாலான விடயங்கள் பற்றி பார்க்கலாம். ஒருவர் குழந்தைப் பருவத்தில் இருந்தே தனக்குப் பிரச்சினை தரும் அடிமனதில் இருநது எழும் விருப்பங்களை அமுககுவதற்கு உட்படுகிறார். இவ்வாறாக அமுக்கப்படும் உணர்வுகலுல் பால் வேறுபாடும் ஒன்று. இது குழந்தைப் பருவத்தில் இருந்து வளர வளர அன்னிலையில் சூழலில் இருந்துவரும் துளங்கல்களையும் பெற்று இருபாலரினருடையேயும் சிந்தனை, உணர்வு வேறுபாடுகளையும் தோற்றுவிக்கின்றது.

அத்துடன் பொருளாதார ரீதியாக "காலம் காலமாக இருந்து வந்த பெண்களுடைய தங்கி வாழும் தன்மை" பெண்ணுக்கு அடிமனதில் பாதுகாப்பற்ற தன்மையைக் கற்பித்து விடுகிறது. இது பொருளியல் ரீதியான, சமூகரீதியாகப் பெண் தனித்துவாழக் கூடிய நிலை ஏற்பட்டுள்ள போதும் உணர்வு பூர்வமாக அநேக பெண்களால் அதனை ஏற்று நடக்கக் கூடியதாக இல்லை. இத்தகைய பின்னணியில் பெண் அதிக அன்பை எதர் பார்ப்பவராகவும் அது கிடைக காத போது தடு மாறுவதாகவும் இருப்பதைப் புரிந்து கொள்ளலாம்.

மேலும் குடும்ப அமைப்பிலும் பெண்ணே அதிக அன்பைப் பெறுபவளாயும் கொடுப்பவளாயும் இருக்கக் காணபபடுகிறாள். இதுவும் அன்பு தொடர்பான பெண்களின் நிலைப் பாட்டை புரிந்துகொள்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஆனால் இன்று பெண்ணிற்குக் கிடைத்துள்ள முன்னேற்றத்திற்கான சந்தர்ப்பங்கள் அவளை இவ்வாறான பின்னணியிலிருந்து விடிவித்து தர்த்துணிவுள்ளவளாக ஆக்கக்கூடியதாக இருப்பதால் அன்பு பற்றிய மரபு ரீதியான நோக்கில் இருந்து மாறுபட்டு புதிய பரிமானங்களைப் புரிந்துகொள்ளக் கூடியவளாகிறாள்.

**காரை பா.அருள்**

# இராசி பலன்

**07.01.2006**
**(மார்கழி 23, சனிக்கிழமை)**
**அட்டமி பிற்பகல் 4.50 மணிவரை**
**ரேவதி முன்னிரவு 6.34மணிவரை**
**இராகுகாலம்9.3211.02மணிவரை**
**சுபநேரம் 3.32-5.02 மணிவரை**
**அட்டமி - நவமி**

| | |
|---|---|
| மேடம் | சயன சுகக்குறைவு, எடுத்த காரியம் தாமத மாகும், பணவிரயம், திடீர்நன்மை. |
| இடபம் | எடுத்த காரியம் கைகூடும், போசன நன்மை, சுபநிகழ்வு, கீர்த்தி. |
| மிதுனம் | கடினமுயற்சி, பாராட்டு, வீருந்துபசாரம், பிறர்உதவி. |
| கடகம் | புதிய திட்டமிடல், தந்தை வழி உறவு, ஆழ்ந்த சிந்தை, ஆன்றோர் மகிழ்வு. |
| சிங்கம் | வீண் தொல்லை, போசனசுகம், கலகம், தொழில் கஷ்டம். |
| கன்னி | எடுத்த கருமம் கைகூடும், தனவருவாய், நண்பரின் உதவி, செல்வாக்கு. |
| துலாம் | ஆரோக்கியம், திடீர் பயணம், பணவருவாய், முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, தொழில் மேன்மை, தனவிரயம். |
| தனுசு | பயந்த சுபாவம், அந்நியர் உறவு, காரிய தாமதம், புதிய செய்தி.. |
| மகரம் | இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, பண வருவாய். |
| கும்பம் | மதிப்புக் குறைவு, பொருள் விரயம், திடீர் நன்மை, முயற்சி தாமதம். |
| மீனம் | நல்ல செய்தி, ஆழ்ந்த சிந்தை, ஜனவசியம், போசன சுகம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

# பாடசாலை செல்லாத மாணவரின் தொகை வலிகாமம் மேற்குப் பகுதியில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பகுதியிலுள்ள அராலி மற்றும் துணைவி போன்ற கிராமங்களில் இருந்து பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களின் தொகை மிகவும் குறைவாக இருப்பதாக கல்வி வலயவட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

மேற்படி கிராமங்களில் இருக்கக்கூடிய குடும்பங்களில் வதியும் சிறு பிள்ளைகளைப் பராமரிப்பதற்குப் போதிய மனிதவளம் இல்லாமையினாலேயே பாடசாலை செல்லும் மாணவர்களைப் பெற்றோர் மறித்துவிடுகின்றனர்.

இது இவ்விதமிருக்க, யாழ்ப்பர்ணம் மாவட்டத்தில் பாடசாலை செல்லாமல் இருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர் ம்த்தியில் கல்விபற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஏற்படுத்தும் ஆக்கபூர்வமான முயற்சியில் யாழ்ப்பாணக் கல்வித்திணைக்களம், யூனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேசமயம், தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் பாடசாலை கல்விக்கு இடைநடுவில் முழுக்குப்போட்ட நிலையில் இருந்த ஆயிரத்து 301இடை விலகல் மாணவர்களை மீளவும் பாடசாலைகளில் இணைத்திருப்பதாக வலயத் தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

மாவட்ட மட்டத்தில் வாழ்கின்ற வறிய குடும்பங்களில் நிலவும் வேலை வாய்ப்பின்மை, வருமான மின்மை போன்ற காரணிகளாலேயே பாடசாலைகளில் இடைவிலகல் மாணவர்களின் தொகைகள் அதிகரித்துள்ளதாகவும் அறியப்படுகின்றது. (த-16)

# இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா பூரண ஆதரவு

(வாஷிங்டன்)

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளுக்கு அமெரிக்க காங்கிஸின் முழுமையான ஆதரவு கிடைத்துள்ளதாக அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படடுள்ளது.

அமெரிக்கா சென்றுள்ள வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர, அமெரிக்க செனட் சபையின் வெளி விவகாரங்கள் தொடர்பான குழுவின் தலைவர் றிச்சர்ட் லொகாவை சந்தித்த போது அமெரிக்காவின் இவ் ஆதரவு வெளியிடப்பட்டுள்ளது.

இச் சந்திப்பின்போது அமைச்சர் மங்கள சமரவீர ஜனாதிபதி மஹிந்தவின் சமாதான முன்னெடுபபுக்களின் நகர்வுகளினை விரிவாக விளக்கினார். இவ்வகையில் ஜனாதிபதி மஹிந்தவின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது. (த-4)

# சமாதானத்தை நிலைநாட்டுவதில் நாம் உறுதியாக உள்ளோம் — சு.ப.தமிழ்ச்செல்வன்

(கொழும்பு)

தமிழீழ நிர்வாக ஆளுகைக்கு உட்பட்ட முள்ளிக்குளம் வலையன்கட்டில் இராணுவத்தினரின்



ஆழ ஊடுருவும் படையணி மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதல் பாரதூரமானதொரு விடயம் என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய செய்தியிலேயே தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்தார்.

சமாதானத்தினை நிலைநாட்டுவதில் விடுதலைப் புலிகள் உறுதியாகவுள்ளனர். வன்முறைகள் அதிகரித்து மக்கள் மீது இராணுவத்தினர் போரைத் திணிக்கும் பட்சத்தில் மக்களின் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கான தீர்க்கமான முடிவுகளை விடுதலைப்புலிகள் எடுப்பார்கள்.

தமிழீழ நிர்வாக ஆளுகைக்கு உட்பட்ட வவுனியா முள்ளிக்குளம் வலையன்கட்டில், இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியினர் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதல் பாரதூரமான விடயமாகும். இது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை தீவிரமாக ஆராய்ந்து வருவதாக தமிழ்ச் செல்வன் அச் செய்தியில் தெரிவித்துள்ளார். (த-4)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைப்பட்டியலை ஏற்கப்போவதில்லையென நோர்வே அறிவிப்பு.

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத் தடைப் பட்டியலை இனிமேல் ஏற்கப் போவதில்லை என்று நோர்வே அறிவித்துள்ளது.

பயங்கரவாத இயக்கம் மற்றும் ஆட்கள் தொடர்பான பட்டியலை அங்கீகரித்து செயற்பட முடியாது எனவும் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பட்டியலை ஏற்று செயற்படுவது சில சமாதான நடவடிக்கைகளில் அனுசரணையாளராக நோர்வே செயற்படுவதற்கு குந்தகமாகவுள்ளது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையே இனப்பிரச்சினை தீர்வுகான சமாதான முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளராக பணியாற்றிவருகின்றது.

இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்யலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தடைசெய்து அதனை பயங்கரவாத பட்டியலில் சேர்த்தாலும் அத்தடை இலங்கை விடயத்தில் நோர்வே அனுசரணை பணிகளை தொடர்வது பாதிக்காது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பயங்கரவாத இயக்கங்கள் ஆட்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பட்டியலையே கருத்தில் கொள்ளப்போவதாகவும் நோர்வே அறிவித்துள்ளது.

எனினும் ஐக்கிய நாடுகளினால அவ்வாறு தடைபெறப்பட்டுள்ள பட்டியல் எதுவும் வெளியிடப்படவில்லை எனினும் சிறுவர்களை படைக்குச் சேர்த்தல் என்ற விடயத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் சிறுவர் மையத்தினால் விடுதலைப்புலிகள் உட்பட 54 அமைப்புக்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனினும் எந்தவொரு அமைப்பையும் ஐக்கிய நாடுகள் சபை தடைசெய்யவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தில் நோர்வே இடம் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத இயக்கங்களில் ஆட்கள் தொடர்பான பட்டியலில் 2001 இல் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டது.

ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்தின் இப்பட்டியல் தயாரிப்போ திருத்தமோ தமது பங்களிப்பு இன்றி செயற்படுவதாக தனது அறிக்கையில் நோர்வே சுட்டிக்காட்டியுள்ளது.

பயங்கரவாதத்தை முற்றாக எதிர்ப்பதாகவும் கண்டிப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலுமகுறிப்பிடப்பட்டுள்ளது. (அ-9)

## சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர் தாக்கப்பட்டார்

(சாவகச்சேரி)

கச்சாய்-கெற்பேலி பகுதியில் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர் தாக்கப்பட்டுள்ளார்.

கெற்பேலிப் பகுதியில் முன்பள்ளி அமைவிடம் தெரிவு செய்வதில் இரு பகுதியினருக்கு ஏற்பட்ட தகராறிலே சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர் தங்கராசா தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாகவே முன்பளளிக்கான அமைவிடத்தைத் தெரிவு செய்வதில் தகராறு இருந்துவந்தது எனவே உரிய அதிகாரிகள் இவ் விடயத்தில் கவனம் எடுத்து இப் பிரச்சினையை தீர்க்குமாறு அவ்வூர் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். (அ-108)

## இலங்கையின் போர்ச் சூழலை மாற்றுவதற்கு உதவி வழங்கும் நாடுகள்முன்வர வேண்டும்

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள போருக்கான வாய்ப்புச் சூழ் நிலையை மாற்றுவதற்கு இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் முன்வரவேண்டும் என்று 'த ஹிந்து' இதழ் தெரிவித்துள்ளது.

இந்திய இராணுவம் இலங்கையில் பணியாற்றியபோது இந்தியப் படைகளின் புலனாய்வுத்துறைக்கு தலைமை வகித்து தற்போது இளைப்பாறியிருக்கும் கேணல் ஆர்.கரிகரன் இந்தக் கருத்தை 'த ஹிந்து' இதழின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் படையினர்மீது தாக்குதல்கள் மேற்கொண்டு வருகிறார்கள். இதனால் படைகளுக்கு இழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

முனனர் இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலைகொண்டிருந்த போது கையாண்ட தாக்குதல்கள் வழிகளையே கையாள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் கைநழுவிப் போய்க்கொண்டிருக்கும் இலங்கையின் சமாதான முனைப்புக்கள் இலங்கைக்கு மாத்திரமல்ல இந்தியாவுக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் எனவே இறந்த நிலையில் உள்ள போர் நிறுத்த உடன்பாட்டை உரியமுறையில் செயல்படுத்த இணைத் தலைமை நாடுகள் அழுத்தம கொடுக்க வேண்டும் என்று கரிகரன் வலியுறுத்தியுள்ளார். (த-7)


## நிதி அமைச்சின் செயற்பாடுகளை ஜனாதிபதி மஹிந்த பார்வையிட்டார்


நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சர் என்ற நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சின் நடவடிக்கைகளை நேற்றுக் காலை பார்வையிட்டார்.

உயர் அதிகாரிகளையும் சந்தித்து உரையாடினார். இதன்போது அமைச்சில் நிலவும் குறைபாடுகள் பிரச்சினைகள் என்பன தொடர்பாக அவருக்கு விளக்கிக் கூறப்பட்டது.

வரவு-செலவுத்திட்டப் பிரேரணைகள் நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாகவும் பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியுடன் பிரதியமைச்சர் றஞ்சித் சியம்பலாப்பிட்டியவும் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)








யாழில் இடம்பெற்ற குண்டுவீச்சை தொடர்ந்து வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டும், வீதிகள் வெறிச்சோடியிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- ரி.திலீப், எஸ்.ரி.ராஜா)

## விருது வழங்கும் வைபவம்

கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரையின் விருது வழங்கும் வைபவம் நாளை மாலை 4.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,அருள்திரு ரூபன் மரியாம் பிள்ளை ஆகியோர் ஆசியுரையையும் பேராசிரியர் அ.சண்முகதாஸ் சிறப்புரையையும் வழங்கவுள்ளனர். (த-7)

## வெள்ளைக் கொடி கட்டப் பணிப்பு


கோப்பாய் பிரதேசத்திலும் மற்றும் பல இடங்களிலும் கறுப்புக் கொடிகளைக்கட்டி தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்கு எதிராக துக்கம் அனுஷ்டித்த மக்களை வீட்டின் முன் வெள்ளைக் கொடிகளை கட்டுமாறு மக்களை படையினர் வற்புறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-74)

## கணனிக் கோளாறினால் மாணவர்கள் பாதிப்பு

2004ஆம் ஆண்டு க.பொ.தஉ/த பரீட்சை முடிவுகளுக்கமைவாக தேசிய கல்வியல் கல்லூரிக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப்பரீட்சை அழைப்புக் கடிதங்கள் தேசிய கல்வியியல் கல்லூரியினால் அனுப்பப்பட்டிருந்தது.இதற்கெனத் தயார் நிலையில் இருந்த சில மாணவர்களுக்கு இறுதி நேரத்தில் கணனியில் ஏற்பட்ட தகராறு காரணமாக கடிதம் தவறுதலாக அனுப்பப்பட்டதாகவும் அதனால் அவர்கள் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றத் தேவையில்லை எனவும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட யாழ். மாணவர்கள் நிர்க்கதியடைந்த நிலைமையில்உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-79)







நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.வண்ணை சிவன் கோவில்வடக்கு வீதியில்உள்ள காவலரண் மீதுகைக்குண்டுஒன்று வீசப்பட்டதாகவும்அது வெடிக்கவில்லை எனவும் இராணுவத்தினர் தெரிவித்தனர். வெடிக்காத நிலையில் உள்ள கைக்குண்டையும், இராணுவத்தினரும் பொலிஸாரும் அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- ரி.திலீப், எஸ்.ரி.ராஜா)

## இன்று ஒரு தகவல்

### இன்னும் இருக்கிறது

எனது நண்பர் ஒருவருக்கு ஜாதகத்தில் நம்பிக்கை உண்டு. அவரே ஜோஷ்யமெல்லாம் பார்ப்பார். "என்ன சார்... இந்தக் காலத்தில் இதையெல்லாம் நம்பிக் கொண்டிருக்கிறீர்களே'' என்று கேட்டால் "உங்களுக்கு ஒன்றும் தெரியாது சார்... இந்த உலகத்தில் ஒவ்வொருவரும் அவரவர் செய்யும் நல்லது கெட்டதற்குத் தகுந்த பலனை அனுபவித்தே தீரவேண்டும்'' என்பார். அதுமட்டுமல்ல... ஒருவன் செத்துவிட்டால் கூட அவன் செய்த பாவ புண்ணியங்கள் அவனுடன் போய்க்கொண்டிருக்கும்'' என்பார். "அது எப்படி கூடவே போகும்?" என்று குதர்க்கமாகக் கேட்டேன். அதற்கு அவர் ஒரு கதை சொன்னார். அதை இப்போது உங்களுக்குச் சொல்கிறேன்.

ஒரு ஊரில் ஒருவர் இருந்தார். அவர் ஜோஷ்யம் பார்ப்பதில் மிகுந்த கெட்டிக்காரர். ஒருவரது தலைமுடியை மட்டும் அவரிடம் காட்டினால் போதும்... அதை மட்டும் பார்த்துவிட்டு அவரது ஜாதகத்தையே அலசி விடுவாராம். அவ்வளவு திறமைசாலி. அந்த ஆள் ஒரு சமயம் கன்னியாகுமாரி கடற்கரைக்குப் போயிருக்கிறார். அங்கே கரையோரமாக மண்டை ஓடு கிடந்திருக்கிறது. அதை எடுத்துப பார்த்திருக்கிறார். அந்த மண்டை ஓட்டை வைத்துக் கொண்டே அதன் ஜாதகத்தை அலசியிருக்கிறார்.

"இந்த மண்டையோட்டுக்கு உரிய ஆசாமி வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறான்... நிறைய கஷ்டத்தை அனுபவித்திருக்கிறான்'' அது தான் முடியாமல் கடலில் விழுந்து தற்கொலை செய்திருக்கிறான் என்பதை அவர் கணித்துவிட்டார். இருந்தாலும் இந்த மண்டைஓடு இன்னமும் அனுபவிக்க வேண்டியது மீதமிருக்கிது என்பதை அவர் உணர்ந்தார்.

அதுசரி... ஒருவர் உயிருடன் இருக்கும் வரையில் தானே நல்லது கெட்டதை அனுபவிக்கமுடியும்? இறந்த பின்பும் மீதமிருக்கிறதென்றால் அதை எப்படி அனுபவிப்பது? இந்த மண்டை ஓட்டுக்கு "இன்னும் கொஞ்சம் மீதமிருக்கிறது'' என்பது அவருக்குப் புரிந்ததே தவிர... அதன் அர்த்தம் என்னவென்று சரியாக விளங்கவில்லை. சரி... இதை இன்னும் கொஞ்சம் விபரமாக ஆராய்ச்சி செய்வோம் என்று நினைத்துக்கொண்டு அதை தனது வீட்டுக்கே எடுத்துக் கொண்டு போய்விட்டார்.

அந்த மண்டைஓட்டை ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டினார். தன்னுடைய தனி அறையில் அதைப் பத்திரமாக வைத்துவிட்டார். தினமும் இரவானதும் தன்னுடைய மனைவியைப் பார்த்து நீ போய் பூஜை அறையில் தனியாகப் படுத்துக்கொள்'' என்று கூறிவிட்டு... தினமும் இரவு 12 மணிக்கு பெட்டியைத் திறந்து பார்ப்பார். மண்டை ஓடு அப்படியே இருந்ததே தவிர "இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கிறது'' என்பதற்கு அர்த்தம் அவருக்கு விளங்கவில்லை. அந்த மண்டைஓட்டுக்கு இன்னும் என்ன பாக்கி இருக்கப் போகிறது?

இப்படியே ஒரு பத்துநாள் கழிந்தது. அவரது மனைவிக்கு சந்தேகம் வந்துவிட்டது. " கணவர் என்னை ஏன் தனியாக உறங்கச் சொல்கிறார்?"என்ற சந்தேகம். உடனே பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் விடயத்தைக் கூறினார். அவர் உடனே "நீ கவலைப்படாதே... நான் கண்டுபிடித்துச் சொல்கிறேன்'' என்று கூறிவிட்டார். அன்றிரவே ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார்... இந்த ஆள் மண்டை ஓட்டைக் கையில் வைத்துக்கொண்டு அதை திருபிப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

மறுநாள் காலையில் அவரது மனைவியைப் பார்த்தார். "ஏனம்மா? நீ உன் கணவனுக்கு முதல் மனைவியா? இரண்டாவது மனைவியா?"என்று கேட்டார். " எனக்குத் தொரிந்தவரை நான் ஒருத்திதான் அவரது மனைவி" என்றார் அவர். "அப்படி இல்லை... நீ அவருக்கு இரண்டாவது மனைவி. முதல் மனைவியின் மண்டை ஓட்டைத்தான் அவர் தினமும் இரவில் எடுத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்".அந்தப் பெண் "அப்படியா விஷயம்?" என்று கூறிவிட்டு கணவன் வீட்டில் இல்லாத நேரமாகப் பார்த்து அந்த மண்டைஓட்டைக் கொண்டு வந்து உரலில் போட்டு உலக்கையால் குத்தி நொறுக்க ஆரம்பித்தார்.

வெளியே போயிருந்த அந்த ஆள் அப்போதுதான் உள்ளே நுழைந்தார். மண்டை ஓடு உலக்கையிடம் குத்து வாங்கிக் கொண்டிருந்தது.அது அனுபவிக்க வேண்டியது இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கிறது என்பதன் அர்த்தம் இப்போது தான் புரிந்தது என்றார்.

இந்தக் கதையிலிருந்து நாம் இன்னொரு நீதியையும் புரிந்துகொள்ள வேண்டும்.அதாவது நமது வீட்டைப் பற்றி நமக்குப் புரியாதது எல்லாம் அடுத்த வீட்டுக்காரங்களுக்கு நன்கு புரியும்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# எரிக்சொல்ஹெய்மின் உயிருக்கு பேரினவாதிகளால் ஆபத்து!

## மலையக மக்கள் முன்னணி

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டாமென பேரினவாதிகளால் எச்சரிக்கப்பட்ட நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், மீண்டும் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். இதனால் அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே அரசாங்கம் அவருக்குப் போதிய பாதுகாப்பினை வழங்க வேண்டுமென ஊவா மாகாண சபை உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் மாகாகணப் பொறுப்பாளருமான அ.அரவிந்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும்,

இலங்கை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அனுசரணையாளராக இருந்து அளப்பரிய பங்காற்றி வந்த எரிக்சொல்ஹெய்ம் தற்போது இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பொறுப்புமிகு அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கின்றமை சமாதான விரும்பிகள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரவேறகத்தக்கதோர் விடயமாகும்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களில் ஆக்கபூர்வமானதும் காத்திரமான பங்களிப்பினை எரிக்சொல்ஹெய்ம் மேற்கொண்டிருந்ததை எவரும் மறுக்கமுடியாது. அவரை 'வெள்ளைப் புலி' என்று விமர்சித்ததோடு, அவரை இந்நாட்டு உள்விவகாரங்களில் தலையிட வேண்டாமென்று பேரினவாத சிறு கூட்டமொன்று கோஷமிட்டு வந்தது.

பேச்சுவார்த்தைகள் எந்த நாட்டில் நடத்தப்பட வேண்டும என்பதில் கூட இணக்கப்பாட்டை மற்றும் விட்டுக் கொடுப்பினை முன்னெடுக்க முடியாத பேரினவாதிகள் ஏனைய விடயங்களில் எத்தகைய நிலைப்பாட்டினை மேற்கொள்வார்கள் என்பது கேள்விக்குறியாகும்.

பேச்சுவார்த்தை எந்த நாட்டில் நடைபெற வேண்டும் என்ற அற்ப விடயத்திலும் தடைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பேரினவாத சிறு கூட்டம் எதிர்கால முன்னெடுப்புகளுக்கு எந்தவகையில் நடந்துகொள்வாகள் என்பது புரியாத புதிராக இருக்கின்றது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நோர்வே அரசு இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான வடயங்களை மேற்கொள்ள தனியானதொரு அமைச்சகத்தை நியமித்திருப்பதை விரும்பியோ, விரும்பாமலோ ஏற்க வேண்டிய நிலையிலுள்ளார். இதுபோன்ற பேரினவாத சிறு கூட்டங்களின் கோஷங்களை ஜனாதிபதி உதாசீனம் செய்து இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான விடயங்களையும் முன்னெடுக்க வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான விடயங்களை மேற்கொள்ளும் வகையில் நோர்வே அரசு தனியானதொரு அமைச்சரை நியமித்திருப்பது பேரினவாதிகளுக்கு விழுந்திருக்கும் பலத்த அடியேயாகும்.

இதுவரை காலமும் அனுசரணையாளராக இருந்து வந்த எரிக்சொல்ஹெய்ம் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் என்ற ஸ்தானத்துடனேயே, இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு நடவடிக்கைகளை இனிமேல் முன்னெடுக்கவிருக்கின்றார். அவ்வேளையில் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் என்ற ரீதியில் அவருக்கான பாதுகாப்புகளை வழங்கவேண்டிய பாரிய பொறுப்பும் இலங்கை அரசைச் சார்ந்ததாகும். இத்தகையதோர் நல்ல சந்தர்ப்பத்தினை சம்பந்தப்பட்டவர்கள் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். இந்நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதன் மூலமே இந்நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது என்பதை அனைவரும் உணர வேண்டும்.

மேலும், அண்மைக்காலங்களில் இடம்பெறும் சுற்றிவளைப்புகள், தேடுதல், பாதுகாப்புக் கெடுபிடிகள், கைதுகள் ஆகியனவும் நாட்டிற்கு ஆரோக்கியமான சூழலைத் தோற்றுவிக்காது. இத்தகைய நடைமுறைகளை அரசு தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். இது போன்ற செயற்பாடுகள் தொடரும் பட்சத்தில் தமிழ் மக்கள் அரசின் மீது அதிருப்தி கொண்டு தனி வழி போகக் கூடிய நிலை ஏற்படும்.

அண்மைக்காலமாக ஏற்பட்ட சம்பவங்கள் எம்மால் ஜீரணிக்க முடியாதிருக்கின்றன. இச் சம்பவங்கள் குறித்து மலையக மக்கள் முன்னணி பலத்த கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது. அத்துடன், இது போன்ற நடவடிக்கைகள் மலையகத்திலும் விஸ்தரிக்கப்படுமேயானால், 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பதற்கிணங்க ஏற்படப்போகும் எதிர்விளைவுகள் கடடுக்கடங்காது போய்விடுவதுடன் அரசினாலும் சமாளிக்க முடியாமல் போய்விடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## 14 வயதிற்குட்பட்ட

# சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் யாழ்.குடாநாட்டில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் 14 வயதிற்குக் குறைந்த சிறுவர்களை வர்த்தக நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தி வருவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி குற்றமாகக் கருதப்பட்டாலும் கூட இங்கு இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை. வர்த்தக நிறுவனங்களில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி வருவதால் அவர்களின் கல்வியும்,எதிர்காலமும் பாழடிக்கப்பட்டு வருவதாக சிறுவர் நலனில் அக்கறை கொண்ட ஒரு நிறுவனம் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளது,

இதேசமயம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான குடும்பங்களின் வருமானம் குறைவாக இருப்பதாலும் குடும்பத் தலைவர்களுக்கு போதிய வேலைவாய்ப்பு இல்லாமல் இருப்பதாலுமே சிறுவர்கள் மிகவும் குறைவான சம்பளத்தில் வர்த்தக நிறுவனங்களில் வேலையில் சேர்ந்து வருகின்றனர்.

இது இவ்விதம் இருக்க, சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் விடயத்தினை மாவட்டத்தில் இல்லாமல் செய்வதற்கு போதிய நடவடிக்கைகளை சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு தொடர்பான ஆர்வலர்களோ அல்லது அமைப்புக்களோ இதுவரை எடுக்க முன்வரவில்லை எனவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கிவருகின்ற மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் திணைக்களம் மற்றும் சிறுவர்களின் குற்ற நடவடிக்கைகளை தடுக்கும் அமைப்பும் இணைந்து துஷ்பிரயோக நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்பட முனைந்து வருவதாகவும் தெரியவருகிறது.

மேலும் வர்த்தக நிறுவனங்கள் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதன் மூலம் அதிக பணத்தை செலவிடாது குறைந்த நிதிச்செலவுடன் கூடிய பலன்களை பெற்று வருவதாகவும் அறியப்படுகின்றது.(த-16)

## வாழ்வாதாரத் திட்ட உதவிகள்

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக் குழுவின் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மேலும் 36 பேருக்கு திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் மானியத்திட்டத்தில் முப்பது பயனாளிகளுக்கு கடற்றொழிலுக்கான உதவிகளும், ஆறு பயனாளிகளுக்கு கட்டுமரம் மற்றும் வலைகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்டிருக்கும் கொட்டடி, சுப்பர்மடம் மற்றும் எரிஞ்சஅம்மன் கோவிலடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களே இத்தகைய உதவியைப் பெற்றுக்கொண்டன.

இதன்னையும் சேர்த்து இந்த நிறுவனம் இதுவரை 89 பயனாளிகளுக்கு உபகரணங்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் நிதியுதவியுடன் அறவழிப் போராட்டக்குழு இந்தத் திட்டத்தை அமுல்செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். (த-16)

## அடிப்படைவசதிகளற்ற நிலையில் கொடிகாமம் அரசினர் வைத்தியசாலை

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கொடிகாமம் அரசினர் வைத்தியசாலையில் போதிய அடிப்படை உட்கட்டுமான வசதிகள் இல்லாமையினால் அங்கு சிகிச்சைக்காக செல்லும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தென்மராட்சி கிழக்கு பிரதேசத்தில் உள்ள 22 கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு உட்பட்டிருக்கும் இந்த அரச வைத்தியசாலையை தரம் உயர்த்துவதற்கான முன் முயற்சிகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

இதேசமயம், இந்த வைத்தியசாலையில் இருக்கும் உள்ளக நோயாளர்களுக்கும், பணிபுரியும் ஊழியர்களுக்கும் என ஒரேயொரு மலசகூடம் மட்டுமே உள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் மற்றும் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமாகிய இலங்கையின் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் ஒரு மலசலகூடத்தினை நிர்மாணித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-16)

# இலங்கையுடனான ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து 21 ஓட்டங்களால் வெற்றி

நியூசிலாந்திற்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணி 4 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. இதில் மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று வெலிங்டனில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்பிற்கு 224 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் புல்ட்டன், மார்ஷர் ஆகியோர் தலா 50 ஓட்டங்களையும், மற்றும் பிளமிங் 37 ஓட்டங்களையும், பிறக்ளின் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சமிந்த வாஸ் சிறப்பாகப் பந்து வீசி 39 ஓட்டங்களைக்






கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் பெர்னாண்டோ 2 விக்கெட்டுகளையும் மற்றும் முரளிதரன் மகரூப் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 50 ஓவர்களில் 225 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணியினர் 46.4 ஓவர்களின் போது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களைப் பெற்று 21 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

துடுப்பாட்டத்தில் முபாரக் 53 ஓட்டங்களையும், சங்ககார 52 ஓட்டங்களையும்



மற்றும் அத்துப்பத்து 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பொன்ட் 3 விக்கெட்டுக்களையும் பிரக்லின், பற்ரல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் மற்றும் கெய்ன்ஸ், ஸ்ரைறிஸ், விக்ரோரி தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (கி-39)

# வீனஸிடம் தோற்றார் சானியா



ஹொங்ஹொங்கில் நடைபெற்றுவரும் வொட்சன் வாட்டர் கிண்ண டென்னிஸ் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒற்றையர் பிரிவில் இந்திய வீராங்கனை சானியா மிர்சாவும் அமெரிக்காவின் வராங்கனை வீனஸ் வில்லியமும் மோதினார்கள். ஆரம் பத்தில இருந்தே வீனஸ் கைதான் ஓங்கி இருந்தது. இப்போட்டியில் 6-3, 6-3 செட் கணக் கல் சானியாவை வீழ்ததி வீனஸ் வெற்றிவாகை சூட தோல்வியுடன் திரும்பினார் சானியா. (கி-39)

# "பாகிஸ்தான் பந்துவீச்சை சந்திக்கத் தயார்"

## சேவாக்



டிராவிட் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் பாகிஸ்தான் சென்றது. இந்திய அணி பாகிஸ் தானில் 48 நாட்கள் தங்கி விளையாடுகிறது.

இந்திய கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் சேவாக், கங்குலி, கும்ளே, பார்த்தவ் பட்டேல் ஆகியோர் ரஞ்சிக் கோப்பை போட்டிகளில் பங்கேற்று விளையாடி வருகின்றனர். இதனால் அவர்கள் நேற்று முன்தினம் இந்திய அணியுடன் பாகிஸ்தான் செல்லவில்லை.

ரஞ்சிக்கோப்பை போட்டி நேற்று முடிவடைந்து இன்று காலை சேவாக், கங்குலி உட்பட 4 பேரும் பாகிஸ்தான் சந்திக்க தயார் என சேவாக் கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியதாவது,

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் அகதர் இந்திய அணிக்கு சவாலாக விளங்குவார் என்பது அவர்களுடைய கருத்து. பந்து வீசசு மட்டுமல்ல எந்த ஒரு சவாலையும் சந்திக்க தயார் நிலையில் உள்ளோம். அதற்குத் தகுந்தவாறு எங்களைத் தயார்ப்படுத்தி வருகிறோம்.

இரு அணிகளுமே பலம் வாய்ந்தது. எனினும் போட்டி நடைபெறும் அன்று எந்த அணி சிறப்பாக ஆடுகிறதோ அந்த அணி தான் வெற்றி பெறும். பயிற்சியாளர் சப்பல் எங்களுக்கு நம்பிக்கையை வளர்க்க மிகவும் உதவியாக உள்ளார். அவர் மிகவும் அனுபவம் வாய்ந்தவர். துடுப்பாடும் போது அவருடைய ஆலோசனைகள் எனக்கு நல்ல முறையில் உதவியாக உள்ளது. பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் ஆரம்ப ஆட்டக்காரராக என்னுடன் காம்பீர் களம் இறங்குவதை விரும்புகிறேன். அவர் மிகச் சிறப்பாக விளையாடி வருகிறார். பாகிஸ்தானில் நடைபெறும் பயிற்சி ஆட்டம் பயன் உள்ளதாக இருக்கும் இவ்வாறு அவர் கூறினார். (கி-39)

# "ஒவ்வொரு தொடருமே சவாலானதுதான்"

## டிராவிட்



ஒவ்வொரு கிரிக் கெட் தொடருமே இந்தியாவுக்கு சவாலானதுதான் என்றார் இந்திய அணித் தலைவர் ராகுல் டிராவிட். மேலும் அவர் கூறியதாவது,

2006 இல் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு அணிகளுமே புதிதாகத் தொடரை தொடங்க உள்ளோம். யாருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம், யார் அதிகமாக ஓட்டங்களைக் குவிப்பார் என்பது முக்கியமல்ல. அதேபோல முந்தைய பதிவுகளும் இப்போது முக்கியமல்ல.

தொடரைப் பற்றி ஏதாவது சொல்லுங்கள் என நீங்கள் (பத்திரிகையாளர்கள்) கேட்கலாம்.

ஆனால், தொழில் ரீதியான வீரர் ஒருவர் அன்றைய தினத்தில் எப்படி ஆட்டத்தை மேற்கொள்ளலாம் என்பது குறித்தே சிந்திப்பார்.

10 ஆண்டுகளுக்கு முன்பு சர்வதேச கிரிக்கெட்டில் அடியெடுத்து வைத்தேன். பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் தற்போது நான் தான் தலைவர் என்பதை கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை.

போட்டியைத் தொடங்கும்போது சிறந்த வீரராகத் திகழ்வதுடன் அணியின் முன்னேற்றத்துக்கும் உதவ வேண்டும் என்றே நினைத்தேன். தலைவர் பதவி தற்போது கூடுதலாக இருந்தாலும், அதே கொள்கை கோட்பாடுடனே இருக்கிறேன்.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடர்தான் நீங்கள் எதிர்கொள்வதிலேயே மிகவும் சவாலானதா எனக் கேட்டதற்கு,

ராகம் பாடி எனது குழந்தையைத் தூங்க வைப்பதுதான் அனேகமாக மிகவும் கடினமானதாக இருக்கும் என நினைக்கிறேன் என்றார் டிராவிட்.

சமீபத்தில் அவருக்கு குழந்தை பிறந்தது இந்த இடத்தில் குறிப்பிடத்தக்கது. (கி-39)

## விளையாட்டுச் செய்திகள்

# "இந்தியா – பாகிஸ்தான் தொடர் உலகிலேயே முதன்மையான மோதல்"

## கிரேக் சப்பல்

இந்தியா- பாகிஸ்தான் இடையிலான தொடர் உலகில் நடைபெறும் கிரிக்கெட் தொடர்களில் முதன்மையானது என இந்திய அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பல் கூறியுள்ளார்.

3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்பதற்காக வியாழக்கிழமை டில்லியிலிருந்து பாகீஸ்தான் சென்றது இந்திய அணி.

அதற்கு முன்னதாக பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார் சப்பல்.

மேலும் அவர் கூறியதாவது,

இந்தியா- பாகிஸ்தான் இடையிலான தொடரே உலகில் தலைசிறந்த தொடராகத் திகழ்கிறது.

இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளிடையிலான ஆஷஸ் தொடருக்கு வரலாற்றுப் பின்புலம் பலமாக இருக்கலாம். ஆனால், இந்தியா- பாகிஸ்தான் தொடர் அவ்விரு நாடுகளைச் சாராத பகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது. மோதல்களிலும் முதன்மையாகவே உள்ளது.

கடந்த முறை இந்தியாவிடம் தொடரை இழந்த பாகிஸ்தான் அணி தற்போது மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளது. இந்திய அணி, தனது மேம்பட்ட ஆட்டத்தை தொடர்வதற்கு பாகிஸ்தான் பயணம் வாய்ப்பாக அமைந்துள்ளது.



பாகிஸ்தானுக்கு எதிரான தொடர் கிரிக்கெட்டில் திறமையான அணிகளைப் பரீட்சித்துப் பார்க்க வாய்ப்பாகவே இந்தியாவுக்கு அமைந்துள்ளது.

இந்தியா- பாகிஸ்தான் தொடர் என்றாலே ஒருவித ஆர்வம், எதிர்பார்ப்பு, உற்சாகம் தானாகவே ரசிகர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. இதனாலேயே மற்ற தொடர்களைக காட்டிலும் இத்தொடர் முக்கிய இடத்தைப் பெறுகிறது. அதில் நானும் ஒருவர் என்பதில் பெருமை அடைகிறேன் என்றார் சப்பல். (கி-39)




இந்திய அணியினர் நேற்று முன்தினம் பாகிஸ்தான் சென்றடைந்தனர். இதில் முதலாவது படத்தில் இந்திய அணியினர் பாகிஸ்தான் விமான நிலையத்தில் சென்றடைந்ததையும், இரண்டாவது படத்தில் இந்தியத் தொடரை எதிர்கொள்வதற்கு தயாராக அவர்கள் மகிழ்ச்சியுடன் பயிற்சியில் ஈடுபடுவதையும் மூன்றாவது இந்திய அணியினரை பாகிஸ்தான் இரசிகர்கள் வரவேற்பதையும் காணலாம்.

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?

(தொடர்ச்சி....)

## பன்னிரு இராசிகளுக்கும் ஏப்ரல் மாதத்துக்குரிய பலன்கள்

| | | | |
|---|---|---|---|
| சூ ரா | சந் | செ | |
| சு பு | ஏப்ரல் ராசி நிலை | | சனி |
| | | | |
| | | குரு (வ) | கே |

### துலாம்
(சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3)

குடும்பத்திற்கு பல நாகரிகப் பொருள்கள் சேரும். காதல், கல்யாண சம்பந்தமான முயற்சியும் இனிமை தருவதாக இருக்கும். வியாபாரிகள் புதிய ஒப்பந்தத்தைப் பெறுவது தன ஆதாயமும் குறிப்பிடத்தக்கது. உங்கள் ஆரோக்கியம் நன்றாகவே இருக்கின்றது. குரு உங்களுக்கு அனுகூலப் பகுதியில் வந்துவிட்டபடியினால் வெகு தொலைவில் இருந்தவர்களும் நெருங்கி வந்து உதவி புரிவர். மேலும் தன்னம்பிக்கை இப்போது வளர்ந்துகொண்டே வரும். வழக்கு, கடன் சம்பந்தமான பிரச்சினைகள் கட்டுப்பட்டதாகவும் திருப்தியளிப்பதாகவுமே இருக்கின்றன. புத்திரர், புத்திரியர்கள் கல்வி ஆரோக்கியம் இந்த வகை மகிழ்ச்சிக்குரியதாகவே இருக்கின்றன. பகைத்துக்கொண்டவர்களால் நன்மையுண்டு. பழைய காரியங்களை முடிக்க புதிய முயற்சி அதிகரித்து இருக்கின்றன. தன்னம்பிக்கையை வளர்க்க சில புதிய முயற்சிகள் பிறரால் பாராட்டையும் உதவியையும் உண்டாக்கும். கணவன், மனைவி உறவு திருப்தியாகவே இருக்கும் என்றாலும் மனைவிக்கு உஷ்ண சம்பந்தமான நோய்கள் தோன்றிவிடும். கவனம் தேவை. கடன் தொல்லைகள் குறையும். நாள்பட்ட விஷயங்கள் சிலவும் இப்போது கூடிவரும். பணம் தேவைக்குத் தக்க சமயத்தில் வந்துசேரும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு இது பெருமை தரும் மாதம் என்பதில் சந்தேகம் இல்லை. சில புதிய முயற்சிகள் செய்வதற்கு மூன்றாவது மனிதரும் உறுதுணையாக இருப்பர். அயல்நாடு செல்வது விருந்து வேடிக்கை சுகம், அனுபவிப்புகளும் உண்டாகும். இனிமையான கனவுகளைக் காட்டும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு ஊர்ப் பயணம் முக்கியம் வாய்ந்தது. ஸ்தல பிரயாணம் தெய்வ வழியாடு போன்ற நிகழ்ச்சிகள் இருக்கும். விட்ட வேலைகளைப் பூர்த்தி செய்வீர்கள். மற்றவருக்கும் உபகாரம் செய்யவேண்டிய மாதமாக அமைந்து இருக்கிறது. குடும்ப வகைக்கு நாகரிகப் பொருள் சேர்க்கையும் உண்டாகும். இப்போது சில முக்கிய காரியங்களுக்கு இடையூறாக நிற்கிறது. பணம் கொடுக்கல், வாங்கல் வழியில் பிடிப்பான போக்கு இந்த மாதம் முடியும் வரை இருக்கவே செய்யும். சகோதர சகோதரி வகையில் சில விஷயங்கள் புகைந்துகொண்டே இருக்கும். சிலர் குடும்பத்தில் சொத்து வகை பிரச்சினையும் முக்கிய அங்கம் வகிக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு இவைகள் முழுவதும் பயன்தராது. இப்போது ஒரு சிலர் மேல் படிப்புக்கோ, மேல் பதவிக்கு உயர்த்தப்பட்டோ அயல்நாடு செல்லும் வாய்ப்பும் உண்டாகும். இது உத்தியோகப் பிரிவினர்களுக்கு மட்டுமல்ல அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும். நல்ல செவ்வாய் அசட்டு தைரியத்தைத்தான் உயர்த்துவான். ஆனால் செயலில் வேகத்தை குறைப்பவனாகும். உறவினர்கள் உங்கள் போக்கிற்கு குறுக்கே நிற்பார்கள். குடும்ப பிரச்சினை தீராது நிற்கும்.

### விருச்சிகம்
(விசாகம் 4, அனுஷம், கேட்டை)

இந்த மாதம் ஆரம்பம் குரு வக்ர நிலையோடு தான் இருக்கும் மாதமிது. திட்டமிட்டது தேங்கி நிற்கத்தான் செய்கின்றன. தொழில் வழியில் தெளிவுடட செயல்புரியும். இது உங்களைச் சேர்ந்தவர்களும் இப்போது ஆதாயம் அனுகூலத்தைப் பெறத்தக்கவர்கள். அரசாங்க மூலியத்தில் எதிர்பார்த்த சில எழுத்து நன்மைகள் கிடைக்கப் பெறும். புதிய தொழில் கூட்டு மனிதர்களையும் சேர்க்கும் மாதம். அரசியல் நண்பர்கள் சிலர் தொடர்பு இனிமையாக இருக்கிறது. பிரசித்தி பெற்ற ஸ்தல பிரயாணத்தை மேற்கொள்ளவும் மாணவ, மாணவிகளுக்கு தேர்வு பாராட்டைக் கொடுக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு உங்கள் பிரச்சினைகள் எல்லாவற்றையும் முதல் தள்ளி வைத்துவிட்டு செயல்படவும். இந்தக் காலங்களில் மேல் அதிகாரிகளைச் சந்திப்பது, பேச்சு வார்த்தைகள் தொடருவதும் நன்மை தராது. உங்கள் குடும்ப சொத்து சம்பந்தமான பிரச்சினைகளில் கூட எந்த நன்முயற்சியும் பயன் தராது. வழக்கு இருப்பவர்கள் வாய்தா வாங்கிக் கொள்வதும் நல்லது. இந்த வகையில் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும். மற்றவர் மறைமுகச் செய்கை உங்களையும் பாதிக்க வாய்ப்பு உண்டு. தன வகையில் எப்படி இருந்தாலும் முன்னேற்றமே இருக்கிறது என்பது இந்த ராசிக்காரர்களுக்கு குறிப்பிடத்தக்கது. கலைப்பிரிவினர்களுக்கும் இது சிக்கல் உண்டாக்கும். அயல் நாட்டுத் தொ[illegible]ளவர்கள் முன்பு சிக்கல் ஏற்பட்ட வழி[illegible] வேறு பாதையில் செல்வது அவசியம[illegible]ல். அரசாங்க சம்பந்தப் பட்ட மனிதர்க[illegible]ருக்கு அனுகூல கெதியில்தான் இயங்க[illegible]வர். எதிர்பார்த்த பணம் வரும். அதறகுடுதத நாள் தேவையற்ற செலவுகள் இயங்கி அலைச்சலும் வரும். பின் அதை வைத்து மறதி, களவுபோதல், சிலருக்கு முரண் வழக்கு பொலிஸ் நிலையம் போவதும் உண்டாகும்.பிறகுதான் நீங்கள் தெளிவு பெறுவீர்கள். உங்கள் கௌரவம், நாணயத்தைக் காப்பாற்றிக் கொள்ள அவசர முயற்சிகள் தேவைப்படும். தன விஷயத்தில் தாராள போக்குடையவர்கள் நீங்கள். மற்றவரை அதிகமாக நம்பும் தன்மை குறைய வேண்டும். நாகரிக வாகனச் செலவு சுப விசேடங்களில் கலந்துகொண்டு விருந்துண்பதும் உண்டாகும். புத்திரர், புத்திரியர் முன்னேற்றத்திற்கு குறைவில்லை. பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமான வழக்கு முடிவடைந்து இப்போது நல்லபடியாக இருக்கும். கவலைப்பட வேண்டாம். உங்கள் வாகனத்தில் செல்லும்போது கவனம் வேண்டும். காலில் அல்லது கையில் ஏற்பட்ட காயம் குறித்துக் கவலைப்படுவதில் பயன் இல்லை. அல்லது குரு 4இல் உச்சம் பெற்றிருந்தாலும் சனி சாரம் பெற்றவனாகும். சுற்றத்தாரை பகைத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் முதலீடுகள் இப்போது பலனளிக்கத் துவங்கிவிட்டன. தன ஸ்தாபன தன உதவி ஏற்படும்.

### தனுசு
(மூலம், பூராடம், உத்தராடம் 1)

மாத ஆரம்பம் பொதுவாக எதிலும் மந்தமானது. அரசாங்க உயர் அதிகாரிகள் இப்போது தான் உங்கள் பக்கம் பார்வையைத் திருப்பி இருக்கிறார்கள். இனி தொடர்ச்சியாக மற்றவையும் இருக்கும். கணவன், மனைவி உறவிலும்கூட சிலசமயம் கசப்பான அனுபவத்தை பெறலாம். ஆரோக்கியம் சுமாரானதே. உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு மேலே குறிப்பிட்ட அத்தனையும் நடப்பதுடன் மேலதிகாரிகளுடன் தொடர்பு இடைவெளி உள்ளதாக இருக்கும். கடைசியில் அவசர கால உதவியான தனம் வந்துசேரும். முதல் சனி இப்போது தீமைக்குரியவன் அல்ல என்பதையும் கவனிக்கவேண்டும். எனவே செய்யும் தொழில் வழி முழுவதும் திருப்தியாகவே இருக்கும். அலைச்சல், அகால உணவு, அகால உறக்கம், கணவன் மனைவி உறவில் இனிமையான போக்கும் உண்டாகும். வாகனம் வாங்குவது, மாற்றியமைத்தலும் உண்டாகும். கடன் திருப்திகரமான போக்கில் இருக்கும். வழக்கு பாதிப்பு தராது. இப்போது போட்டி, பந்தயம், லாட்டரி போன்ற வழிகளில் தன ஆதாயம் கிட்டும் காலம். கடல் கடந்து சென்றிருந்த உறவினர் வரவு சுப காரியங்களை நிறைவேற்ற சாதகமாக அமைந்திருக்கின்றன. தேக சுகம் திருப்தியானதே. உத்தியோகத் துறையினர்களுக்கு இக்காலம் சிறப்பான கௌரவ உயர்வை அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. மேலும், அரசியல் மனிதர்கள் உங்கள் தொழில் வழி முயற்சிக்கு ஊக்கமளிப்பவர்களாக இருப்பர். உங்கள் தொழில் வழி முயற்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் சில புதிய வழிகள் தோன்றும் என்பது ஒரு சிறப்பு நன்மையே. நல்ல உணவு, நல்ல உறக்கம் தொடர்ந்து இருக்கும். மாதம் முதலில் பிறர் கூறும் அவதூறு வார்த்தைகள் மனதைப் புண்படுத்துவதாக இருக்கும். அரசியல், அரசாங்கதுறையில் நீங்கள் எதிர்பார்க்கும் எழுத்து வகை நன்மையும் இப்போது கிடைக்கும். இது இருந்தாலும் காலதாமதம்தான். சனியின் வேகம் குறைந்துகொண்டு வருவதால் நீங்கள் சில புதிய திட்டங்களை உருவாக்கும் காலமிது. கடன் வழக்கு பிரச்சினைகள் வேகம் தணிந்து இருக்கும். உறவினர் சந்தித்து கூடிப் பேசி நன்மையும் விருந்தும் இருக்கிறது. பத்தில் சனி பழைய நகை போன்றவைகளை விற்பதும் உண்டாகும். புகழ்மிக்கவர், அரசியல்வாதிகளின் சந்திப்பு சுப விஷயம் குறித்து பேசி முடிக்கவும் உதவியாக இருக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டுக் கடிதம் நல்ல தகவலைக் கொண்டு வரும். கணவன், மனைவி உறவு கண்ணியப் போக்கில் இயங்கும். உத்தியோகப் பிரிவினர்களுக்கு இருக்கும் பதவி அல்லாமல் முக்கியப் பொறுப்புக்களை ஏற்க வேண்டியிருக்கும். மேல்நிலை மனிதர்கள் திருப்தியான சூழ்நிலையில் இயங்குவர். சகோதரன், சகோதரி வகையில் முன்னேற்றத்தையும், சுபம் அடைதல் போன்றவைகளையும் பெறுவர். கவன மறதியினால் களவுபோதல் அல்லது பிறபொருள் இழப்பு போன்றவைகளையும் உண்டாக்குவான் சனி. தனித்து இயங்குவதை விட கூட்டு முயற்சி கணிசமான நன்மை தரும் என நம்பலாம்.

### மகரம்
(உத்தராடம் 2 ,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 )

கலைப் பிரிவினர்களுக்கு வெளியூர் பிரயாணம் முக்கிய அம்சமாகும். சுப விஷயம் குறித்து வரும் கடிதம் மகிழ்ச்சிக்குரியதாக இருக்கும். நீங்கள் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் அதிகம். செய்தொழில் வகையில் கூட்டு மனிதர்களிடம் சுமுகமான போக்கு வளர்த்துக்கொள்ளவேண்டி இருக்கிறது. அவை ஒப்பந்தம் அரசாங்க அக்ரிமெண்ட் போன்றவையும் இருக்கும். குடும்ப விஷயத்தில் நீங்கள் விலகி இருப்பதோ அல்லது வெறுப்புடன் இருப்பதோ கூடாது. குழந்தைகள் வகையில் மருத்துவச் செலவும்கூட இருக்கும். கடன் வகையில் கவனமாக இருந்து வார்த்தைக்கு இடம்தராமல் ஒரு பகுதியை பூர்த்தி செய்ய வேண்டும். கலைத்துறையினருக்கு வார்த்தையளவில் நின்றிருந்த விஷயங்கள் செயலுக்கு வரும். பெரிய மனிதர்கள், அரசாங்க முக்கிய ஆட்கள் சந்திப்பு செய்தொழில் வழியில் சிறப்புத் தன்மை உடையது. சூரியன், புதன், ராகு இந்தக்கால கடைசிக்குள் தொழில் வழியில் ஒரு பெரும் மாற்றத்தை உண்டாக்க வேண்டியும் இருக்கிறது. எழுத்து வழியிலும் ஆதாயம் இருக்கிறது. கொடுக்கல், வாங்கல் போன்றவை மகிழ்ச்சிக்குரியது. குடும்பத்து விஷயங்கள் சற்று அதிகமாக கவனம் செலுத்தவேண்டும். எதிலும் தனித்து செயல்படுவதைவிட கூட்டு முயற்சிதான் நன்மை தருவதாக இருக்கிறது. உங்கள் சுயதொழில் வழியை கவனிப்பது முக்கியம். கணவன், மனைவி உறவு முணுமுணுப்பாக இருக்கும். முயன்ற காரியங்களில் முடியும் தருவாயில் நீங்கள் செயல்படுத்தும் தன்மை மற்றவர்களுக்கு அதிருப்தி அளிக்கும். அரசாங்கத்தின் கண்காணிப்பு அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் தொடர்பு இருந்தும் சகாயம் கிடைக்காது. வரவு எவ்வளவுதான் வந்தாலும் பணம் கையில் தங்காது. ஏதாவது திடீர் செலவு ஏற்படும். குடும்பத்தில் பொதுவாக திருப்தியற்ற போக்கு காணப்படும். அதிக அலைச்சல், சரியான தூக்கமின்மை காரணமாக உடல் ஆயாசம் இருக்கும். தகுந்த ஓய்வு தேவை. வண்டி, வாகனங்களை மாற்றிடவோ அல்லது விற்றிடவோ நேரும். போட்டி, பந்தயங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். செய்தொழில் எதுவாயினும் திருப்திகரமாக் இருக்கும். உங்கள் குடும்ப வகையில் ஓர் அளவு திருப்தியான போக்கு இருந்தாலும் வெளிவட்டாரம் திருப்தியளிக்கவில்லை. ராகு விபத்து போன்றவைகளை உண்டாக்கக்கூடியவன்தான். கடைசி நேரத்தில் காக்கப் படுபவர்கள். தொழில் கூட்டு நன்றாக இருக்கும். மேலும் புத்திரர், புத்திரியர்கள் கல்வி, ஆரோக்கியம் இந்த வகை மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது. பகைத்துக்கொண்டவர்களால் நன்மையுண்டு. பழைய காரியங்களை முடிக்க புதிய முயற்சி அதிகரித்து இருக்கின்றன. தன்னம்பிக்கையை வளர்க்க சில புதிய முயற்சிகள் அதிகரித்து பாராட்டையும், உதவியையும் உண்டாக்கும். கணவன், மனைவி உறவு திருப்தியாகவே இருக்கும் என்றாலும் மனைவிக்கு உஷ்ண சம்பந்தமான நோய்கள் தோன்றிடும் கவனம் தேவை. காதலர்களுக்கு சுமாரான காலமாகும்.

### கும்பம்
(அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 )

இப்போது ஆரம்பமே வக்ர குரு 9இல் எதிலும் வார்த்தையை அளவிட்டுப் பேசவேண்டும். புத்திரர்கள் வகையில் மட்டும் சற்று இடைவெளி இருக்கும். இதற்குக் காரணம் உறவினர்களின் தூண்டுதலே இருக்கும். இதனால் சுப காரியங்களைத் தள்ளிப்போட வேண்டி இருக்கும். மாதம் நடுப்பகுதிக்கு மேல் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது, விருந்துண்பது போன்றவைகள் இருக்கும். இப்போது இணக்கமாக செயல்படுவர். இந்த ராசி காண்ட்ராக்ட் போன்ற ஒப்பந்த தொழில் உடையவர்களுக்குப் பலவகை ஆதாயமும் இருக்கும். புதுவகை மனிதர்கள் சந்திப்பு மனதுக்கு இதம் அளிப்பதாக இருக்கும். குடும்பப் பெண்களுக்கு பசும்பொன் ஆபரண சேர்க்கையும், புத்தாடைகள் சேர்க்கையும் உண்டாகும். புண்ணிய ஸ்தல பிரயாணம் குடும்பத்துடன் சென்று வருதலும் இருக்கும். குழந்தைகள் தேக இனிமையான சூழ்நிலை எல்லோருக்கும் இன்பம் தருவதாக இருக்கும். குழந்தைகள் மகிழ்ச்சி மிக்கவர்கள். புத்திரியர் கல்வி உயர்வும் குறித்தபடி இருக்கிறது. குடும்பத்தில் பெண்களுக்கு வெண்மை, நீலக்கல் ஆபரண சேர்க்கையும் உண்டாகும். வாகன சேர்க்கை, திடீர் பிரயாணம், ஸ்தல பிரயாணம் உண்டாக்கும். ஆரோக்கியத்தில் கவலை இல்லை. கூட்டுத் தொழில் உள்ளவர்களுக்கு பாகஸ்தர்கள் இடையில் பிணக்கு உண்டாக வாய்ப்பு இருக்கிறது. குழந்தைகள், மனைவி வகையில் சிறு சிறு சச்சரவுகள் இடம்பெறும். தெய்வ வழிபாடு மன அமைதியை உண்டாக்கும். கலைத்துறையினர்கள் சில ஒப்பந்தம் எழுத்து வகையில் எதிர்பார்க்கும் நன்மைகள் அப்படியே ஸ்தம்பித்து நிற்கும். இதற்கு நண்பர்களின் முட்டுக்கட்டை காரணமாக இருக்கும். சிலசமயம் இவை வழக்காகவும் உருவெடுக்கலாம். நீங்கள் போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வகையில் ஈடுபாடு உடையவர்களாக இருக்கிறீர்கள். எந்தவிதமான அவசரப் பிரச்சினைகளையும் உடனுக்குடன் தீர்க்கப்படும் ஆற்றல், தனநிலையும் உடையவர்களாக இருக்கிறீர்கள். வேண்டாத சூழ்நிலையில் இயங்கி வந்தவர்களும் வெகு நெருக்கமாக இருப்பதை உணரலாம். உங்களைச் சுற்றி இருந்த போலி மனிதர் அல்லது நண்பர் குழு இப்போது இல்லை. எனவே, நீங்கள் தொழில் வழியில் செவ்வனே இயக்கம் கொள்ளவும் முடிகிறது. போட்டி, பந்தயம், சூதாட்டம் போன்ற ஈடுபாடும் இருக்காது. குடும்பத்திற்கு நாகரிகப் பொருட்கள் உத்தியோக முயற்சி செய்பவர்களுக்கு கடிதம் மூலம் அனுகூலமான தகவல் கிடைக்கும். கடைசிப் பகுதியில் இந்த ராசி நேயர்களுக்கு தந்தை வழியில் மருத்துவச் செலவுகள் இடம்பெறும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு அலைச்சல் சற்று அதிகமாக இருப்பதுடன் சில அவசர பிரச்சினைகளும் இடம்பெறும். பிரயாணம் முன்கூட்டி ஏற்பாடு செய்தது கடைசி நேரத்தில் மாற்றம் செய்யவேண்டி வரும்.

### மீனம்
(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி )

இந்த மாத ஆரம்பமே அட்டமத்தில் குரு வக்ரமும் விரயத்து புதன், சுக்கிரன் வேண்டாத் பிரச்சினைக்கு வழிவகுப்பர். அல்லது கூட்டு மனிதர்களிடம் கருத்து மோதல் இருக்கும். பண நெருக்கடி இருக்க முடியாது. அவை இயல்பாக இருக்கின்றன. உறவினர் தொடர்பும் திருப்தியானதே. பிரயாணம் முக்கியம் வாய்ந்ததாக இருக்கும். பழைய கட்டடம் வாங்குவது அல்லது ஒப்பந்தம் செய்வதும் இருக்கும். தொழில் சம்பந்தமான அலைச்சல் குறையாது. சிலர் தூரதேச மனிதர்களைச் சந்திப்பதும் உண்டாகும். கணவன், மனைவி உறவு மகிழ்ச்சிக்குரியதாக இருக்கும். உத்தியோகப் பிரிவினருக்கு மேன்மையை உண்டாக்கும். பிற்பகுதியில் ஆரம்பத்தில் இருந்த மந்தநிலை அகன்றுவிடும். தொழில் வகையில் நீங்கள் துரிதப்போக்கில் இயங்குவதும் உண்டு. உங்கள் கூட்டாளிகளோ மற்றவரோ பொறாமைப்படத்தான் செய்வர். நீங்கள் கௌரவத்தை பார்ப்பதோடு பல விஷயத்தையும் கவனிக்கவேண்டும். உத்தியோகப்பிரிவினர்களும் துரிதப்போக்கில் இயங்குவது மற்றவர் பாராட்ட அமையும். இப்போது பழைய கடனில் ஒரு பகுதி அடைக்கப்படுவதும் இருக்கும். இதனால் அடிக்கடி பிரயாணம் செய்வதும் இருக்கும். அவசர காரியங்களை முடித்துவிடுவீர்கள். பண[illegible]ழக்கம் திருப்தியாக இருக்கின்றன. பழைய [illegible] இதர பொருள்களும் வாங்கும் மாதம். பெ[illegible]களுக்கு பட்டு உடைகள் சேர்க்கையும் உண்டா[illegible] திருப்தியளிக்கும் காலமே. புண்ணிய[illegible] பிரயாணத்தை மேற்கொள்வதும் இருக்கும். சிலர் இடமாறுதல் செய்தொழில் அமைத்தல். கூட்டு முயற்சியில் ஆதாயமும் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் மிதமான போக்குதான் இருக்கும். தொழில் உயர்வு உண்டு. உறவினர்களும் நண்பர்களும் பாராட்டாமல் இருக்கமுடியாது. பழைய கட்டடத்தை புதுப்பித்தல், புதிய கட்டடம் கட்டி முடித்தல் போன்றவையும் இருக்கும். அரசாங்கம் மூலமாக எழுத்து வகை ஆதாரம் மட்டும் கிடைக்க சற்று காலதாமதம் ஆகலாம். இப்போது சில நல்ல நண்பரையும் பெறுவீர்கள். உறவினர்களுக்கு விருந்தளிப்பது போன்ற செலவுகளும் இடம்பெறத்தான் செய்யும். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு குறுக்கு வழி தனசேர்க்கை வருவதுங்கூட குறிப்பிடத்தக்கது. அரசாங்க உத்தியோகத்தர்களால் சில வழியில் குறுக்கீடு இருக்கின்றன. குறிப்பாக வாகனம் ஓட்டுநர் கவனமாக இருக்கவேண்டும். சிறு விபத்து கை கால்களில் காயமும் உண்டாகும். கணவன், மனைவியிடையே வாக்குவாதம், கசப்பான வார்த்தைகளும் உண்டாகும். காணாமல் போன பொருளைப் பற்றிய பிரச்சினை பெரியதாக ஆகிவிடக்கூடும். தனநிலை மிதமாகவே இருக்கும். பழைய காரியங்களை முடிக்க புதிய முயற்சி அதிகரித்து இருக்கின்றன. நீங்கள் செய்யும் தொழில் நிமித்தமாக அலைச்சல் அதிகமாக இருக்கும்.

(தொடரும்...)

# ஏமாற்றிவிட்ட 2005

## ஜூன்



03.06.2005 *திருகோணமலையில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தை அகற்றக் கோரி யாழ்.குடா நாட்டில் ஹர்த்தால்.



04.06.2005 *பேராசிரியர் சிவஞான சுந்தரம் (நந்தி) காலமானார்.



07.06.2005 *எரிக்சொல்ஹெய்ம் - சு.ப.தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் சந்திப்பு.



08.06.2005 *உலக வங்கியின் உயர்மட்டக் குழு யாழ்.வருகை.



*பொதுக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசிய பிக்குகள் முன்னணி உண்ணாவிரதம்.

09.06.2005 *இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங் இலங்கை வருகை.

10.06.2005 *நோர்வே பிரதிநிதிகள் குழு யாழ்.வருகை.

12.06.2005 *சந்திரிகாவுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு.

## வலம்புரி நினைவுக் குறிப்பு

13.06.2005 *இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு வாஷிங்டனில் ஆரம்பம்.

*ரணில் விக்கிரமசிங்க - சந்திரிகா சந்திப்பு.

*பொதுக் கட்டமைப்புக்கு எதிராகப் பிக்குகள் பேரணி.

15.06.2005 *ஐ.ம.சு.முன்னணியிலிருந்து ஜே.வி.பி விலகியது.

*பொதுக்கட்டமைப்பை எதிர்த்து 80 தொழில்ச் சங்கங்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்.

*அரசின் அடக்கு முறைகளுக்கு எதிராக தென்மராட்சியில் உண்ணாவிரதப் போராட்டம்.



19.06.2005 *யாழ்.பல்கலைக்கழகத்தில் 'தமிழ்த்தேசியத்தின் குரல்' எழுச்சி நிகழ்வு.

20.06.2005 *நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன், முன்னாள் இந்தியப் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் இலங்கை வருகை.



*பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தி வடமராட்சியில் மாபெரும் பேரணி.



22.06.2005 *விடார் ஹெல்கிசன் - சு.ப.தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் சந்திப்பு.

23.06.2005 *நோர்வே அதிகாரிகள் குழு கிளிநொச்சி விஜயம்.

24.06.2005 *சுனாமி நிவாரணம் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டது. புலிகளின் தரப்பில் திட்டமிடல் செயலக பிரதிப் பணிப்பாளர் சண்முகலிங்கம் ரஞ்சனும், அரசு தரப்பில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலர் எஸ்.எம். ஜெயசிங்கவும் கைச்சாத்திட்டனர்.





27.06.2005 *தீவகத்திலும், தென்மராட்சியிலும் பொது மக்களின் வீடுகளில் உள்ள இராணுவத்தை வெளியேறக் கோரி மக்கள் பேரணி.

30.06.2005 *சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் சந்திப்பு.


*இராணுவப் புலனாய்வுத் துறையினர் மூவர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை.

## உலக அரங்கில்



01.06.2005 *கந்தகாரில் மசூதியில் குண்டுத் தாக்குதல் 50 பேர் பலி. 170 பேர் காயம்.

*சீனாவில் மழை வெள்ளம் 100 பேர் பலி. 80 ஆயிரம் பேர் பாதிப்பு.



03.06.2005 *சீனாவில் உயிரிழப்பு 240 ஆக அதிகரிப்பு. 800 பேரைக் காணவில்லை. 36 000 வீடுகள் அழிவடைந்தன. 5 இலட்சம் பேர் பாதிப்பு.



16.06.2005 *சீனாவில் தொடர் மழை 400 பேர் பலி.

23.06.2005 *ஆப்கானிஸ்தானில் அமெரிக்கக் கூட்டணிப் படைத்தாக்குதல் 132 தலிபான்கள் பலி.

26.06.2005 *ஈராக்கில் மனித வெடிகுண்டு வெடித்து 36 பேர் பலி. 19 பேர் காயம்.

(தொடரும்...)

# சுயாதீன ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்குக

## ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள்

அரசியலமைப்பின் 17ஆவது திருத்தச சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரசியல் அமைப்பு பேரலை உட்பட சுயாதீன ஆணைக குழுககளின் உறுபபினர்களை உடன் நிய மிகக வேண்மென்று ஐக்கிய தேசியக் கட்சி அரசைக் கோரியுள்ளது.

இது தொடர்பாக கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அரசியலமைப்பின் 17ஆவது திருத்தச சட்டம் சர்வ கட்சிகளின் இணக்கப்பாட்டின் பிரதிபலனாகும்.

ஜனநாயகத்தை வலுப்படுத்தும வகையில் ஸ்தாபிக்கப்பட்ட அரச சேவை ஆணைக் குழு, பொலிஸ் ஆணைக்குழு ஆகியன இயங காதுள்ளமை குறித்து அரசாங்கத்திடம் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

தேர்தல் ஒன்று நடத்துவதற்கு முன்னர் சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

# ஈழத் தமிழ் மக்களின் நலன்களில் இந்தியா அக்கறை கொள்ளவேண்டும்

## - பெ.சந்திரசேகரன்



இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இந்திய அரசு அந்நியப் படாமல் தமிழர்களின் நலன்களை நோக்கிய பார்வையைச் செலுத்த வேண்டுமென மலையக மக்கள முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியா இந்த நிலைப்பாட்டை எடுப்பதற்கு தமிழகத் தலைவர்கள் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்நாட்டிற்கு சென்றுள்ள சந்திரசேகரன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக கழகத்தின் பொதுச் செயலர் வைகோவைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு வேண்டுகோள விடுத்துள்ளார்.

பெ.சந்திரசேகரனின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட வைகோ, மலையக அரசியல் கட்சிகள் வடகது - கிழக்கு கட்சிகளுடன இணைந்து செயற்பட முன்வந்துள்ளமை, போராட்ட வரலாற்றில் மலையக மக்களின் அடிப்படை உரிமை வாழ்க்கையிலும் முக்கிய திருப்பத்தைக் கொண்டுவரும் என நமபிக்கை தெரிவித்துள்ளார். (த)

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட ஆய்வறிகையாளர் நியமனம்

அவசார கால நிலமையின் பொழுதிலும் போர் நிறுத்த மீறல்கள் நடைபெறும் தறுவாயிலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பது சம்பந்தமாக விசேட ஆய்வறிகையாளர் ஒருவரை (Special Rapporteur) மனித உரிமைகள் ஆணைக்குழு நியமித்துள்ளது. இது தொடர்பில்,

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின தவிசாளர் கலாநிதி ராதிகா குமாரசுவாமி தனது அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் ஆயுத முரண்பாடுகளோடு தொடர்பான வன்முறைகள் அதிகரித்து வருகின்ற நிலையில அவற்றின் நிகழ்வுகளின்பொழுது நியாயமற்ற வகையிலான கொலைகள், சுற்றி வளைத்து தேடுதல்கள், ஆட்கள் கைது செய்யப்படுதல அவர்கள தடுத்து வைக்கப்படுதல் போன்ற மனித உரிமை மீறல்களோடு தொடர்பான சம்பவங்கள் பரவலாக நாடு பூராகவும் குறிப்பாக வடக்கு - கிழக்கிலும் நடப்பதாகக் குறறச் சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையலுவலகத்திலும் பிராந்திய நிலையங்களிலும் தற்பொழுது பணிபுரிபவர்களைக் கொண்டு அவ்வகையான சந்தர்ப்பங்களில் ஏற்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களை செயல்வலுவுள்ள வகையில் காண்காணித்து விசாரணைகளை நடாத்தி அறிக்கை சமர்பபிக்க செய்விப்பது கடினமாக உள்ளமையால் அக்குறையைத் தீர்க்க வேறு பொறுப்புக் களுடன் பின்வரும் பொறுப்புக்களையும் ஏற்று செயறபட விசேட ஆய்வறிகையாளர் ஒருவரையும் (Special Rapporteur) அவரின் தலைமையின கீழ் செயற்பட குழு ஒன்றையும் நியமிப்பது அவசியமாகியுள்ளது.

அவையாவன:

*போர் நிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்படும் பொழுதிலும அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தும் தறுவாய்களிலும் சாதாரண குடி மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்க எடுக்கப்பட வேண்டிய ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்குதல்.

*தங்களது கடமைகளைப் புரியும் பொழுது மனித உரிமைகள் தொடர்பான பிரமாணங்களைப் பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் பேணுவதைக கண்காணிக்க அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தகவல்களைத் திரட்டுதல்.

*தேவையேற்படும் பொழுதில் விசாரணைகளை நடாத்தி ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

*பேர் நிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்படும் பொழுதிலும அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத தும் தறுவாய்களிலும் ஏற்படுகின்ற நிகழ்வுகளினை தொகுத்து மனித உரிமைகளின நிலை பற்றி இரு வாரங்களுக்கு ஒரு முறை அறிக்கை சமர்பித்தல்.

போா நிறுத்த உடன்படிக்கை மீறப்படடுள்ளதாகக் குற்றம் சாட்டப்படும பொழுதிலும் அவசரகால அதிகாரங்களைப் பயனபடுத்தும் தறுவாய்களிலும் மனித உரிமைகளைப பாதுகாப்பது சம்பந்தமாக விஷேட ஆய்வறிக்கையாளர் பதவிக்கு (Special Rapporteur) ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியும் அரசியல் யாப்பு சபையின் முன்னைநாள் உறுப்பினரான ரி.சுந்தரலிங்கம் அவர்கள் நியமிக்கபபட்டுள்ளார். குறித்த குழுவின் ஏனைய உறுப்பினர்களாக இலங்கை நிர்வாக சேவையிலிருந்து ஓய்வு பெற்றவரான எம்.சீ.எம் இக்பால் அவாகளும் கடமையின் பொழுது காணாமற்போன இராணுவத்தினரின் உறவினர்களின சங்கத் தலைவியான திருமதி விசாக தர்மதாச அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விஷேட ஆய்வறிகையாளர் அவாகளுக்கும் செயற்பாட்டு குழுவினருககும் பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் தங்களுடைய ஒத்துழைப்பை வழங்குவார்கள் என மனித உரிமைகள் ஆணைக் குழு எதிர்பார்க்கின்றது.

குறித்த விசேட ஆய்வாறிகையாளரைப் பின்வரும் விலாசத்தில் பொது மக்கள தொடர்பு கொள்ளலாம். மனித உரிமைகள ஆணைக்குழு, இல. 36/7, தின்சி வீதி, பொரள்ளை, கொழும்பு 08. (அ)

# தடகள விளையாட்டுப் போட்டியில் யாழ்.பல்கலை வீரர்கள் சாதனை

(யாழ்ப்பாணம்)

பல்கலைக் கழகங்களுக்கிடையேயான 2005 ஆம் ஆண்டுக்குரிய தடகள விளையாட்டுப் போட்டி பேராதனைப் பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் கடந்த டிசம்பர் மாதம் 17ஆம் 18ஆம் திகதிகளில் நடைபெற்றது. 12 பல்கலைக்கழகங்கள் பங்கு பற்றிய இப்போட்டியில் யாழ்.பல் கலைக்கழகம் ஆண்கள் பிரிவில் 2ஆம் இடத்தையும், பெண்கள் பிரிவில் 3ஆம் இடத்தையும் பெற்றது.

யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து பங்கு பற்றிய வீர வீராங்கனைகளில் பெரும்பாலானோர் தமது பல்கலைக்கழத்திற்கான புள்ளிகளைச் சேர்த்துக்கொடுத்தனர்.

இதில் முக்கிய பெறுபேறுகள் வருமாறு,

**ஆண்கள் பிரிவு**

1ஆம் இடம் ஏ.யூட் பிரசாந்தன் - 800 மீற்றர்,1ஆம் இடம் ஏ.யூட் பிரசாந்தன் - 1500 மீற்றர், 3ஆம் இடம் ஏ.யூட் பிரசாந்தன்- 4x400 மீற்றர், 1ஆம் இடம் எம்.லாவண்யன் - தடியூன்றிப்பாய்தல், 2ஆம் இடம் என்.கிஷோக்குமார் - உயரம்பாய்தல், 2ஆம இடம் ரி.விஜயகுமார் - குண்டெறிதல், 3ஆம் இடம் ஆர்.இளம்சிங்கம் -800 மீற்றர், 3ஆம் இடம் ஆர்.இளம்சிங்கம் - 1500 மீற்றர், 3ஆம் இடம் ஆர்.இளம்சிங்கம்- 4x400 மீற்றர், 3ஆம் இடம் எஸ்.சுமன் - 400 மீற்றர், 3ஆம் இடம் எஸ்.சுமன் - 4x400 மீற்றர், 3ஆம் இடம் ஏ.துஸ்யந்தன் - 100 மீற்றர், 3ஆம இடம் பி.கிஷோக்குமார் -4x400 மீற்றர்.

மேற்படி போட்டியில் யூட் பிரசாந்தன் அனைவரது பாராட்டையும் பெற்றார்.

**பெண்கள் பிரிவு**

3ஆம் இடம் ரி.வாசுகி - 400 மீற்றர் தடைதாண்டல், 3ஆம் இடம் ரி.வாசுகி - முப்பாய்ச்சல், 2ஆம் இடம் ரி.வாசுகி - 4x400 மீற்றர், 3ஆம் இடம் ரி.வாசுகி - 4x100 மீற்றர், 3ஆம் இடம் எம்.மொஷாந்தி - 200 மீற்றர், 2ஆம் இடம் எம்.மொஷாந்தி - 4x400 மீற்றர், 3ஆம இடம் எம்.மொஷாந்தி -4x100 மீற்றர், 2ஆம் இடம் எம்.நிஷாந்தி குரூஸ் -400 மீற்றர், 2ஆம் இடம் எம்.நிஷாந்தி குரூஸ் - 4x400 மீற்றர், 3 ஆம் இடம் ஜி.மதுரா - 100 மீற்றர் தடைதாண்டல், 3ஆம் இடம் சி.பி.வேணி மெற்றல்டா - தட்டெறிதல், 3ஆம் இடம் எஸ்.சாந்தினி - 4x100 மீற்றர், 3ஆம் இடம் எஸ்.ஸ்ரீபிரபாலினி 4x100 மீற்றர், 2ஆம இடம் ஆர்.பிறேமலக்ஷ்மி -4x400 மீற்றர். (த)

# விடுதலைப்புலிகளுக்கு நிதிசேகரிக்கும் குழுக்களை கட்டுப்படுத்த வேண்டும்

## அமெரிக்காவிடம் மங்கள வேண்டுகோள்

(கொழும்பு)

கொலைகளை மேற்கொள்வதில் அல் கெய்தா இயக்கத்தைவிட தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரமானவர்கள் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தற்சமயம் அமெரிக்கா சென்றுள்ள அவா வோஷிங்டனில் ரைம்ஸ் ஊடக இதழுக்கு வழங்கிய செவ்வியில் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சேகரிக்கும் குழுக்களைக் கட்டுப்படுத்த வேண்டுமெனவும் கூறிய அவர் கெய்தா இயக்கத்தைப் போன்றே தமிழீழ விடுதலைப்புலிகளும் கொலைகளை மேற்கொண்டு வருவதாக குற்றம் சாட்டினார்.

இந்த நிலையில் அவர்களின் நடவடிக்கை கட்டுப்படுத்தப்பட்டு சமாதான முனைப்புக்களில் அவர்களை வழிநடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-9)

# எழுவரில் நால்வர் விடுதலை

(துன்னாலை)

கடந்த 27ஆம் திகதி பருத்தித்துறையில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலையடுத்து கைதான ஏழு பேரில் நால்வர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கிளைமோர் வெடித்த இடத்திற்கு அருகாமையில் உள்ள பேக்கரி ஒன்றில் பணிபுரிந்த பத்மநாதன் மனோகரன் (வயது 31), சோமசுந்தரம் சந்திரகுமார் (வயது 31), புலோந்திரன் நுகெந்தர் (வயது23) ஆகியோரும் கடைக்குப் பொருட்கள் வாங்கச சென்ற வேளை கைதான றெமூன் ஹைதீன் (வயது 42) என்பவருமே பருத்தித்றை நீதிமன்றில் வைத்து நேற்று 10 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய மூவரும் பொலிஸ் விசாரணைகள் முடிவடையவில்லை என்று நீதிமன்றுக்குக கொண்டுவரப்படவில்லை. அவர்களை எதிர் வரும் 16ஆம் திகதி வடுவிக்கப்படலாம என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-101)

# கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றச் செயலாளர்களிற்கான கலந்துரையாடல் எதிர் வரும் 10ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் சகல உள்ளூராட்சி மன்றங்களிற்கும் கடித மூலம் அறிவித்துள்ளார். சகல உள்ளூராட்சி மன்ற செயலாளர்களையும் சிரேஸ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் தவறாது இக் காலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி ம.வசந்தகுமார் கடந்த 2ஆம் திகதி முதல் வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையளாரினால் யாழ். மாவட்ட பிரதேச உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னாள யாழ்பபாணம் மாநகர சபைச் செயலாளராகக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தகக்கது. (த-47)



இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் உடல் நிலை மிக கவலைக்கிடமாக உள்ளது. இதனையடுத்து அவர் அனுமதிக்கப்பட்டுள்ள ஜெருசேலம் ஆஸ்பத்திரியில் பத்திரிகையாளர்கள் குவிந்துள்ளனர்.

புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

2006இல் 5ந் தரப் புலமைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களே! உங்கள் நன்மை கருதி 2006 ஜனவரி முதல் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும்

புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

உங்கள் வலம்புரியில் வெளிவரும்! வாங்கத் தவறாதீர்கள்!

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

11 மீள்பார்வை


'ஹரிச்சந்திரா' படத்தில்...(1968)

டி.எஸ்.என்: பொதுவாக அந்தக் காலத்தில் நாடக பாஷையில் அயர்ன் திரீபார்ட் அல்லது அயர்ன் ராஜபார்ட் என்று சொல்வார்களே? அதன் விளக்கம் கூற முடியுமா?

சிவாஜி: அயர்ன் ஸ்தீரீ பார்ட் என்றால் மிக முக்கயமான பெண் வேஷம் என்று அர்த்தம். அதுபோல் அயர்ன் ராஜபார்ட்டும் உண்டு. ஆனால் ஸ்த்ரீ பார்ட்டுக்குக் கொஞ்சம் கௌரவமும், மரியாதையும் ஜாஸ்தி.அது எனக்கு அதிகமாகவே கிடைத்தது.

### நண்பனின் மறைவு

டி.எஸ் என் : பழனி முகாம் நடந்த பிறகு உங்களுடைய பாலகான சபாவினுடைய வருமானம் பெருகி வளர்ச்சி ஏற்பட்டு அதில் ஏதாவது முன்னேற்றங்கள் ஏற்பட்டதா?


சிவாஜி: அப்படி ஏதும் உடனடியாக ஏற்படவில்லை. பழனி முகாம் முடிந்தவுடன் நாங்கள் மதுரை சென்றோம். மதுரை போன போதுதான் வாழ்க்கையே கொஞ்சம் நன்றாக அமைந்தது. பழனியில் கிட்டத்தட்ட இரண்டு வருடம் முகாம் போட்டிருப்போம் என்று நினைக்கிறேன். ஆனால் மதுரை வந்த பிறகுதான் நாங்கள் முழுவேளைச் சாப்பாடு சாப்பிட்டோம்.


'பாரதவிலாஸ்' படத்தில்...

மதுரை சென்று நாங்கள் பழனியில் நடத்தியதுபோல் கிருஷ்ண லீலா நாடகம் நடத்தினோம். அதில் வழக்கம்போல் நான் ஸ்திரீ பார்ட்தான். அப்போது தேவகி வேஷம் போட்டேன். கம்ஸன் தேவகியையும் வாசு தேவரையும் ரதத்தில் வைத்து ஓட்டிக் கொண்டு வருவார். அப்பொழுது அசரீரி தோன்றும். அசரீரி என்றால் மேலிருந்து பேசு கிறமாதிரி ஒரு குரல். உனக்கு எட்டாவது மகனால் மரணம் என்று அசரீரி சொல்லும். இந்தக் காட்சியில் எலக்ட்ரிக் டெக்னிக் மூலம் சில ட்ரிக் செய்வார்கள். எனக்கு அது எப்படி? என்று சொல்லத் தெரியவில்லை. என்னென்ன வகையில் மக்களுடைய பார்வையைக் கவரமுடியுமோ அந்தந்த வேலைகளையெல்லாம் செய்வார்கள். ஒரு ஸ்டார் மாதிரி வானத்திலிருந்து கீழே இறங்கி ஒரு தேவதை பேசுகிறது மாதிரி சப்தம் வந்து கொண்டே இருக்கும்.

ஒருநாள் நாடகத்தில் எல்க்ட்ரிக்கல் டிரிக் மூலம் ஸ்டார் தோன்றியது. அசரீரி வரவேண்டும். குரல் வந்தவுடன் அந்த எலக்ட்ரிக் ஸ்டார் கீழே வரவேண்டும். ஆனால் ஏதோ கோளாறு காரணமாக அது பாதியில் நின்றுவிட்ட்து. அப்போது எங்கள் நாடகக் கம்பெனியில் ஒரு எலக்ட்ரீசியன் இருந்தார். அவர் பெயர் சுப்பையா. எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அவர் உடனே மேலே ஏறி அந்தக் கோளாறை சரிப்படுத்தும்போது கரண்டில் அடிபட்டு அப்படியே செத்துப்போய் வௌவால் போல் தொங்கிவிட்டார்.

மேடையிலேயா? என்று கேட்பீர்கள். ஆமாம் மேடை மேல் சீன் தொங்கும். பிளாட் பாரத்தின் மேல் உத்தரத்திலேயே வௌவால் போல் தொங்குகிறார். இறந்துபோய்விட்டார். ஆனால் நாடகத்தில் அந்த சீன் நடந்துகொண்டே இருந்தது. பேசவேண்டிய வசனங்களை நாங்கள் பேசிக்கொண்டு தான் இருந்தோம். அந்த சீன் முடிந்தவுடன் மேலே பார்த்தால் சுப்பையா இறந்து தொங்கிக் கொண்டிருந்தார். நம்முடன் இருந்தவர் நம்முடன் காலையில் எழுந்து பழகுகிறவர் திடீரென்று இறந்தால் எப்படி இருக்கும். நமக்கு நண்பனைப் பிரிந்த துயரம் என்னை வாட்டியது.அதுமட்டுமில்லை.அவர் இறந்ததன் விளைவு என்ன தெரியுமா? கம்பெனியில் ஒரு ஸ்த்ரீபார்ட் பையன் இருந்தான். அவன் ஒரு மலையாளி .அவன் பெயர் கிருஷ்ணன். அவன் இதைப் பார்த்துவிட்டு மூன்று நாட்களாகச் சாப்பிடவேயில்லை. நாங்கள் எல்லோரும் ஒன்றாக இருக்கிறோம் அல்லவா. ஒன்றாக இருந்தவர்களில் திடீரென்று ஒருவர் பிரிந்து விட்டால் எப்படி இருக்கும்? அதே ஞபகமாக இருந்தான்.


'புதையல்' படத்தில் பத்மினியுடன்...(1957)

ஒரு நாள் இரவு நேரம் படுக்கையிலிருந்து கிருஷ்ணன் எழுந்து சென்றான். எங்களது மானிட்டர் அங்குதான் படுத்திருந்தார். அவர் எங்களுடைய பாடிகார்ட் (Body Guard) மாதிரி அவர் அவனைப் பிடித்துக்கொண்டார். எங்கேடா போகிறாய்? என்று கேட்டார். அதற்கு அவன் இல்லை சுப்பையா என்னைக் கூப்பிடுகிறார். நான் போகிறேன் என்று விடாமல் அழுதான். எப்படியோ சமாதானப்படுத்திக் கொண்டு வந்து படுக்க வைத்தார்கள். மறுநாள் காலை பார்த்தால் அவன் பிணமாக இருக்கிறான். சுப்பையாவின் ஞாபகத்தால் அவன் இறந்தே போய் விட்டான். ஒரு நண்பனுக்காக உயிரை விடுகிறேன் என்று பேச்சுக்கு சொல்வோம். இவன் உண்மையிலேயே உயிரை விட்டவன்.

அந்தக் காலத்தில் நாடகக் கம்பெனிப் பிள்ளைகளுக்குள் எந்தவிதமான பேதமும் கிடையாது. எங்களது நாடகக் கம்பெனியில் முஸ்லிம்கள் இருந்தார்கள். கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். ஆனால் எங்களுக்குள் எந்தவிதமான வேறுபாடும் கிடையாது. இந்தக் கருத்தை விளக்கத்தான் பின்னாளில் பாரதவிலாஸ் என்ற படம் எடுக்கப்பட்டது. தமிழ் நடிகர்கள், மலையாள நடிகர்கள், கன்னட நடிகர்கள், தெலுங்கு நடிகர்கள் என்ற பேதமெல்லாம் சமீபத்தில் சுதந்திரத்திற்கு பிறகுதான் நம் நாட்டில் வந்தது. மொழிவாரியாக மாகாணங்களைப் பிரித்ததுதான் நம் பெரியோர்கள் செய்த தவறு என்று நான் நினைக்கிறேன். இந்த பேதங்களெல்லாம் நாங்கள் சின்னப் பிள்ளையாக இருக்கும்பொழுது கிடையாது. அதுதான் எங்கள் குருகுலம். ஒரே இடத்தில் இருந்தோம். ஒரு தாய் பிள்ளைகளாக வளர்ந்தோம்.

### வேதனை மிக்க மேலூர் முகாம்

டி.எஸ் என் : நீங்களும் உங்கள் முகாமும் எவ்வளவு நாட்கள் மதுரையில் இருந்தீர்கள் ? வேறு என்ன நாடகம் போட்டீர்கள்? அங்கிருந்து வேறு எங்கு சென்றீர்கள்?

சிவாஜி: மதுரை முகாமில்தான் தசாவதாரம் நாடகம் தயாரித்து மிகச் சிறப்பான மேடைக்காட்சிகள், ட்ரிக்களுடன் நடத்தினோம். பிறகு மதுரையிலிருந்து மேலூர் சென்றோம். அந்த ஊரில்தான் நமது தலைவர் திரு. கக்கன் அவர்கள் பிறந்தார்கள்.அங்கே ஒரு இடம் பார்த்து நாங்களே கொட்டகை போட்டுக் கொண்டோம். நாங்கள் தங்கியது ஒரு மைதானத்தில்தான். (தொடரும்)

# ஊடகவியலாளரின் செயற்பாட்டுக்கு இராணுவம் தடைசெய்ய மாட்டாது

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் எந்தப் பிரதேசத்திலும் சுதந்திரமாக செய்திகளைச் சேகரிப்பதற்கு இராணுவத்தினர் தடையாக ஒருபோதும் இருக்க முடியாது எனவும் இந்த விடயம் தொடர்பாக இராணுவத் தளபதியுடனும் கலந்துரையாடியுள்ளதாகவும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பதிகாரி ரோகித பிரியதர்ஸன தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் பலர் தற்போது சுதந்திரமான தமது செய்தி சேகரிப்புகளுக்கு இராணுவத்தினர் பல இடையூறுகளையும், அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்துவதாக முறையிட்டுள்ளனர். இராணுவத்தின் இந்த நடவடிக்கைகளானது சட்டத்திற்குப் புறம்பானது.

ஊடகவியலாளர்கள் தம்மிடமுள்ள ஊடகவியலாளர் அடையாள அட்டையினைப்' பயன்படுத்தி செய்திகளை எங்கும் சேகரிக்கலாம். இதனை எவராலும் தடுக்கமுடியாது. இது சர்வதேச நியதியும் ஆகும்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு கலந்துரையாடவுள்ளதாகவும், படையினரால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் எவரும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யலாம் இதற்கு உடனடியாக உரிய நடவடிக்கைகள் எடுகக்ப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

# உரிய பணத்தை செலுத்திய பின்பும் தொ.பே. இணைப்புகள் இல்லை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் தொலை பேசி இணைப்பு வசதியைப் பெறுவதற்கென 23 ஆயிரம் ரூபாவைச் செலுத்திய பலருக்கு இன்னமும் தொலைபேசி இணைப்புக்கள் வழங கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இதனால் பணம் செலுத்திய விண்ணப்பதாரிகள் ஸ்ரீலங்கா ரெலிக் கொம் நிறுவனத்துக்கு அடிக்கடி சென்று ஏமாற்றத்துடன் திரும்பி வருவதாகவும் அறியப்படுகிறது.

இதேசமயம் தொலைபேசி இணைப்புக்கென உரிய பணத்தைச் செலுத்தியவாகள் நீண்டகாலமாக காத்திருப்போர் பட்டியலில் இருக்கவேண்டிய நிலைமையில் உள்ளதாகவும் தெரியவருகின்றமை குறிப்பிடத்தக்க தாகும். (த-16)

# ஐரோ. ஒன்றியத்தின் பயங்கரவாத பட்டியலை ஏற்க முடியாது

## நோர்வே அறிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலை நோர்வே யால் ஏற்றுக்கொள்ள முடியாதென அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜொனார்ஸ் கார்ஸ்ரோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் தடைசெய்யப்பட்ட பயங்கரவாதப் பட்டியல் ஒன்று இல்லை என்றபோதும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் மையத்தின் கீழ் சிறுவர்களை படைக்கு சேர்த்தல் தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட 54 அமைப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும்எந்தவொரு அமைப்பும் ஐநாவினால்தடைசெய்யப்பட வில்லை.இந்த நிலையில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதன காரணமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலை தம்மால் ஏற்றுக் கொளள முடியாது என நோர்வே தமது நிலைப்பாட்டுக்குக் காரணம் கூறியுள்ளது.

அததுடன் தமது நாடு ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கம் இல்லாமையால் தம்மை ஐரோப்பிய பயங்கரவாதப் பட்டியலை ஏற்றுக்கொள் ளுமாறு அழுததம் கொடுக்கமுடியாது என ஜொனாஸ் காஸ்ரோர் தெரிவித்துள்ளார். (த)

# பொங்கியெழும் மக்கள் படை திருமலையில் துண்டுப்பிரசுரம்

(கொழும்பு)

இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்து தமிழ் இளைஞர் களின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்ற பின்னர் திருமலையில் பொங்கியெழும் மக்கள் படையினரின் துண்டுப்பிரசுரங்கள் விநியோ கிக்கப்பட்டுள்ளன. இதனால் இராணுவத்தினர் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பொதுமக்களிடம் அதில் என்ன எழுதப்பட் டுள்ளது என இராணுவத்தினர் விசாரித்துள்ளனர்.

இன்று திருகோணமலையில் வெளியிடப்பட்டுள்ள பொங்கியெழும மக்கள் படையினரின் துண்டுப்பிரசுரத்தில்,

எமது தமிழ் மாணவர்கள் மிகக் கொடூரமான முறையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் தாக்கப்பட்டு, சீரழிக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த வெறித்தனமான குரோத செயலானது தமிழ் மக்களை பெரும் கோபத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

இதற்கு ஈடாக பெரும்தொகையான சிங்களக்காடையர்களதும், ஸ்ரீலங்கா இராணுவத்தினரதும் உயிர்கள் வெகுவிரைவில் எம்மால் பறிக்கபபடும்.

எமது தமிழீழ, தமிழ் மக்கள் மாலைநேரங்களில் இனி நடமாடுவதைத் தவிர்க்கவும் அத்தோடு தமிழீழ இளைஞர் யுவதிகளின் பாதுகாப பினை உறுதிப்படுத்த எமது மக்கள் படையுடன் இணைந்துகொள் ளுங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# புனரமைக்கப்படாத நிலையில் வீதிகள் பயணிகள் பெரும் சிரமத்தில்!

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல கிராமிய வீதிகள் மிக நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்து வருவதால் பொதுமக்களும், வாகனங்கள் ஓட்டுபவர்களும் அன்றாடம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இத்தகைய வீதிகள் குன்றும் குழியுமாக இருந்து வருவதால் பொது மக்கள் மிகவும் சிரமப்பட்டே தமது பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த வீதிகளைப் புனரமைப்புச் செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பல கிராமிய மட்ட அமைப்புக்கள் உள்ளூராட்சி அமைபுககளிடமும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும நிதி ஒதுக்கீடுகளுக்கான கோரிக்கைகளை விடுத்திருந்த போதிலும் கூட எததகைய அபிவிருத்தியும் ஏற்படவில்லை எனத் தெரிய வருகின்றது(த-16)

# வெள்ளவத்தையில் துப்பாக்கிச் சூடு தென்னாபிரிக்கா பிரஜை காயம்!

(கொழும்பு)

வெள்ளவத்தைப் பகுதியில் வைத்து ஸ்ரீலங்கா பொலிஸார்நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஜே.வி.பி. இயக்கத்தின் தலைவரும், ஜே.வி.பியின் நிறுவுநர் ரோகண விஜேவீரவின் மைத்துனருமான எஸ்.சந்திரா பெர்னாண்டோ மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். எனினும் இவரின் நண்பரான தென்னாபிரிக்க தமிழர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தென்னாபிரிக்க மருத்துவ நிபுணரான ராஜேந்திரம் நடராஜா என்பவரே படுகாயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

சந்திரா பெனாண்டோ, தனது நண்பரான மருத்துவ நிபுணர் ராஜேந்திரம் நடராஜாவையும், தனது ஊர்தியில் ஏற்றிக்கொண்டு கொழும்பு ஹில்ட்டன் விடுதியில் இரவு விருந்து ஒன்றில் கலந்துகொள்ள சென்றிருந்தார்.

காலிவீதியில் பயணம் செய்து கொண்டிருந்த இவர்கள் வீதியில் ஊர்தி நெருக்கடி காணப்பட்டதால் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிசன் வீதியால் திரும்பி கடற்கரை வீதியூடாக ஹில்டன் விடுதியைவந்தடையும் நோக்கில் இராமகிருஷ்ண மிசன் வீதியால் சென்றுள்ளார்.

அச்சமயம் இராமகிருஷ்ண மிசன் முன்பாக வீதிச் சோதனைச்சாவடியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் மற்றும், இராணுவத்தினர் இவர்களின் ஊர்தியை மறித்துள்ளனர்.

அவர்கள் ஊர்தியை நிறுத்தியபோது அருகில் வந்த பொலிஸார் ஊர்தியின் கதவை திறக்குமாறு பணித்துள்ளனர். ஆனால் கதவைத் திறக்க மறுத்த சந்திரா பெர்னாண்டோ, தான் குற்றவாளி இல்லை எனக்கூறி கண்ணாடியை மூடி ஊர்தியை வேகமாக செலுத்த முற்பட்டுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த பொலிஸார் ஊர்தி மீது சரமாரியான துப்பாக்கிச் சூடடினை மேற்கொண்டுள்ளனர். இதனால் இவருடன் பயணம் செய்த ராஜேந்திரம் நடராஜாவிற்கு வலது கன்னத்தில் பெரும் காயம் ஏற்பட்டுள்ளது. இருந்த போதும் நிலைமையினை உணர்ந்த சந்திரா பெர்னான்டோ ஊர்தியை நிறுத்தாமல் நேரே கொழம்பு தேசிய மருத்துவமனைக்கு கொண்டுசென்று தனது நண்பரை மருத்துவமனையில் சேர்த்துள்ளார். ஊர்தியைப் பின்தொடர்ந்து விரட்டிச் சென்ற பொலிஸார் அவரைப் பிடிக்கமுடியவில்லை.

சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்ட வெள்ளவத்தைபொலிஸார் காரை நிறுத்தாமல் சென்றதனாலேயே உள்ளே ஆயுதங்கள் கடத்தப்படலாம் என்ற சந்தேகத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தெரிவித்துள்ளனர்.

ஆனால் இது குறித்து தகவல் வெளியிட்டுள்ள சந்திரா பெனாண்டோ, தன்னை எப்படியாவது கொலை செய்வதற்கு ஜே.வி.பி.யினர் முயற்சி செய்துவருவதாகவும், முன் பல தடவைகளும் ஜே.வி.பி யினர் இவ்வாறு பல சதித்திட்டங்களை தீட்டியிருந்ததாகவும், நண்பரின் உயிரைக் காப்பாற்றும் முகமாகவே தான் ஊர்தியை நிறுத்தாமல் சென்றதாகவும் தெரிவித்துள்ளார். இதே நேரம் காயத்திற்குள்ளான ராஜேந்திரம் நடராஜா அறுவைச் சிகிச் சைக்கு உட்படுத்தப்பட்டதாக தெரியவருகின்றது. (த)

## பாதயாத்திரை

இலங்கையில் மீண்டும் யுத்தம் வேண்டாம் என்பதை வலியுறுத்தி கொழும்பிலிருந்து இன்று பாதயாத்திரை ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்த பாதயாத்திரை பம்பலப்பிட்டி ஊடாக ஐக்கிய நாடுகள் சபை தூதரகச் செயலகம் வரை செல்லும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த பாதயாத்திரைக்கான ஏற்பாட்டை இலங்கை தேசிய கிறிஸ்தவ சிறார்கள் மன்றம் செய்துள்ளது. இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தம் வரக்கூடாது என வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபை விடேச தூதுவரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

இந்த பாதயாத்திரையில் வடக்கு-கிழக்கு மற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல்வாதிகள் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் மற்றும் யுத்தத்திற்கு எதிரான அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள விருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. (அ)

## கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரைகள்

இன்று ஆரம்பமாகவிருந்த கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பீட முதுமாணி கற்கை நெறி விரிவுரைகள் பிற்போடப்பட்டுள்ளது.எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று உப வேந்தர் எஸ். ரவீந்திரநாத் தெரிவித்துள்ளார். (அ-7)

# சர்வதேச மாணவர் பேரவை— இராணுவத்தினரால் படம்பிடிப்பு

யாழ்ப்பாணம் பலாலிவீதியில் அமைந்துள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நேற்று காலையில் இராணுவத்தினரால் படம் பிடிக்கப்பட்ட துடன் அங்கு வைக்கப் பட்டுள்ள பெயர் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களையும் இராணுவத்தினர் பதிவு செய்து சென்றுள்ளார்கள் எனத் தெரிவிக் கப்படுகிறது.நேற்றுக்காலையில் 8.55 மணியள வில் குறிப்பிட்ட இடத்திற்கு வந்த இரண்டு இராணுவத்தினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டு சென்றுள்ளார்கள் எனவும் இரண்டு இராணுவத்தினர் மட்டும் படம் எடுத்தும் மற்றும் பெயர்ப் பலகையில் உள்ள விபரங்களைச் சேகரித்த போதிலும் சுமார் எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அப்பகுதியில் நிலை யெடுத்து இருந்ததாகவும் தெரிவிக் கப்படுகிறது. இந்த அலுவலகத்தின், ஒரு பகுதியில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனின் அலுவலகம் இயங்கி வருகின்றமையும் குறிப்பிடத்த க்கதாகும். (அ)

# திருகோணமலை நேற்றும் ஸ்தம்பித நிலையில்

திருகோணமலையில் அன்றாட நடவடிக் கைகள் நேற்று நான்காவது நாளாகவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

அண்மையில் 5 இளைஞர்கள் திருகோணமலையில் உயிரிழந்த சம்பவத்தைக் கண் டித்து ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு வருவதே இதற்கான காரணமாகும் கடந்த மூன்று தினங்களாக அனுஷ்டிக்கப்படும் ஹர்த்தால் காரணமாக திருகோணமலையில் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக மேல்மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் றோகான் அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளதுடன் நகரின் போக்குவரத்து நடவடிக் கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் எவ்வித வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறவில்லை நகரின் பாது காப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் யாவும் எடுக்கப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திருகோணமலையில் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் தமிழ் மக்கள் மீது படையினர் மேற்கொள்ளும் அடவடித்தனங்களை நிறுத்தக் கோரியும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்புக்கள் நடத்திய கண்டனப் பேரணியில் பெரும் திரளான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாணவர்களின் படுகொலையை நெடுங்கேணி பிரதேச ஆசிரியர்கள் ,மாணவர்கள் பெற்றோர், ஆசிரியர் சங்கத்தினர் பழைய மாணவர்கள் என் பலரும் வன்மையாக கண்டித்துள்ளனர்.(த-9)

# சிறுவர் முன்னேற்றத்துக்கான நிகழ்ச்சித் திட்டங்கள்—

சிறுவர் ஆண்டாக பிரகடனம் செய்யப்பட விருக்கும் இந்த ஆண்டில் சிறுவர் முன் னேற்றம் சம்பந்தமான பல நிகழ்ச்சிகளைச் சிறுவ்ர் அபிவிருத்தி அமைச்சு ஒழுங்கு செய்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் சுமிந்ராஜி ஜெயசேன தகவல் த்ருகையில் சிறுவர்களின் வாழ்க்கை நலன்களை அபிவிருத்தி செய்வதும் பாதுகாப்பதும இந்த திட்டத்தின் நோக்கமெனத் தெரிவித்தார்.

சிறுவர்களின் நலனை இலக்காகக் கொண்டு செயற்படும் நிறுவனங்களுடன் இணைந்து இத் திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என்றும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சகல அதிகாரங்கள் ஜனாதிபதியினால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

அனாதைச் சிறுவர்களின் ப்ர்துகாப்பு வீதியோரச் சிறுவர்களின் அபிவிருத்தி என்பன சம்பந்தமான சட்டங்கள் நடைமுறைக்கு இடப்படும் எனவும் சிறுவர்கள் பராமாப்பு நிலையங்கள் அமைக்கப்படு வதோடு சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராகக்கடும் நடவடிககை எடுக்கப்படு மெனவும் அவர் மேலும தெரிவித்தார். (து-2)

## நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்குப் புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு 5.1.2006,6.1.2006 7.1.2006ஆகிய திகதிகளில் அழைக்கப்பட்டு சமுகமளிக்காதவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி காலை 9.00மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

# வனவளங்களை பாதுகாக்க தனியானதொரு திட்டம்

(கொழும்பு)

வரவு -செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டதற்கமைய வனவளங்களைப் பாதுகாப்பதற்கான தனியானதொரு திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

வனவள அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வனவள பாதுகாப்புத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொலனறுவை மாவட்டம் சுற்றாடல் பாதுகாப்பு மாவட்டமாக பெயரிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

## விளக்கமறியல் நீடிப்பு

மன்னார் கடற்பரப்பில் கடந்த 6ஆம் திகதி கைது செய்யப்பட்ட தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் இருவரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. இவர்கள் தொடர்பில் பொலிஸார் அறிக்கையொன்றை சமர்ப்பித்ததன் பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)




வடமராட்சி லயன்ஸ் கழகத்திற்கு லயன்ஸ் கழகப் பிராந்தியத்தலைவர் எஸ். சொக்கலிங்கத்தின் உத்தியோகபூர்வ விஜயத்தை கழகச் செயலாளர் எஸ். துரைசிங்கம் மங்களவிளக்கேற்றி ஆரம்பிப்பதையும் லயன் ஏ. தணிகாசலம் உரையாற்றுவதையும் லயன்ஸ் கழகவலயத் தலைவர் எஸ். அரியரத்தினம் கழகத் தலைவர் சிவகுமாரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் பிராந்தியத்தலைவர் எஸ். சொக்கலிங்கம் முன்னாள் கழகப் பொருளாளர் எஸ். தங்கராஜாவின் சேவையைப் பாராட்டி பதக்கம் அணிவிப்பதையும்படங்களில் காணலாம். (பரு. நிருபர்)

சமாதானத்திற்காகச் சண்டை பிறப்பிக்காமல் சண்டைக்காக சமாதானத்தைப் பிறப்பிக்கும் மனிதன் புத்திசாலியல்ல.

-பிளேட்டோ

# வலம்புரி

## தென்னிலங்கை சமாதான விரும்பிகளுக்கு ஓர் அன்பு மடல்

2002 ஆம் ஆண்டு அரசும் விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்தபின்னர் ஏ-9 பாதை திறக்கப்பட்டது.

பாதை திறக்கப்பட்டதும் வடபகுதியில் இருந்து தென்னிலங்கைக்குச் சென்றவர்களை விட தென்னிலங்கையில் இருந்து வட பகுதிக்கு வந்தவர்களே ஏராளம்.

யுத்த நிறுத்தம், ஏ-9 பாதை திறப்பு இவற்றினால் ஓர் சுமூகமான சூழ்நிலை வடபகுதியில் ஏற்பட சிங்கள பொது அமைப்பின் பிரதிநிதிகள்,சமாதான விரும்பிகள், புத்திஜீவிகள்,சமயத் தலைவர்கள் எனப் பலரும் வந்து போயினர்.

கூடவே மாணவர்களுக்கிடையிலான பரஸ்பர உறவுப் பரிமாரற்றத்தை ஏற்படுத்துவதற்காக 'உறவுப் பாலம்' என்ற ஏற்பாடுகளும் தடல்புடலாக நடந்து முடிந்தன.

ஆ! பெரும் தவறு இழைத்து விட்டோம். தமிழ் மக்களும் சிங்களவர்களும் ஒற்றுமையாக இருந்திருக்கலாம். பெரும்பான்மை என்ற கர்வத்தால் தமிழர்களின் உரிமைகளை வழங்குவதில் நாம் பிழைவிட்டோம் என வடபகுதிக்கு வந்த சிங்கள புத்திஜீவிகளும் சமாதான விரும்பிகளும் தெரிவித்தனர்.

இருபது வருட கால யுத்தத்துக்குப்பின்னர் சிங்கள மக்களிடையே பெரியதொரு மாற்றம் ஏற்பட்டு விட்டதென்ற நினைப்பு தமிழ் மக்களிடமும் ஏற்பட்டது.

சிங்கள மக்கள் யுத்தத்தின் கொடுமைகளுக்கு ஆதரவாளர்கள் அல்ல. ஆட்சியாளர்களே தமது பதவிக்காக யுத்தத்தை விரும்பியுள்ளனர்.

இனிமேல் அவர்களின் பருப்பு அவியமாட்டாது என தமிழ் மக்களும் எண்ணிக் கொண்டனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்து போன சிங்கள மக்கள் தென்னிலங்கைக்குத் திரும்பியதும் சமாதானத்தைப் பற்றி இம்மியும் நினைக்காதவர்களாக செயற்பட்டனர்.

யாழ்ப்பாணத்திற்கு வந்து போனதும் இலங்கை ஒட்டு மொத்தமாக சிங்கள தேசம் என்ற இறுமாப்பே அவர்களிடம் ஏற்பட்டதென்பதை சமகால நிகழ்வுகள் உறுதி செய்கின்றன.

சமாதானத்தை வலியுறுத்தியவாறு யாழ்ப்பாணத்துக்கு வந்த சிங்கள அமைப்புக்கள் இப்போது மட்டும் அதை மறந்து போனமை ஏன்?

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதி உதவியைப் பெற்று யாழ்ப்பாணத்திற்கு வந்து போனதைத் தவிர அவர்களிடம் எந்தவித சமாதான விருப்பமும் இருக்கவில்லை என்ற உண்மை இப்போது தெளிவாகத் தெரிகின்றது.

எதுவாயினும் சமாதானத்தின் பெயரால் யாழ்ப்பாணத்திற்கு வந்து போன சிங்கள மக்களுக்கு ஓர் தார்மீகப் பொறுப்புண்டு.

அது என்னவெனில், சமாதானத்திற்காக தென்னிலங்கையில் குரல் கொடுப்பதாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் யுத்தத்தால் ஏற்பட்ட இழப்புகளை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் சமாதானத்தின் அவசியப்பாட்டைசமாதான விரும்பிகள் உணர்ந்து கொள்ள முடியும்.

## வடக்கு- கிழக்கு, மலையகத் தமிழர் இணைவு ஒளி உதயத்தின் நல்ல சமிக்ஞை - வைகோ

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா அன்னியப்படாமல் தமிழர்களின் நலன் நோக்கிய பார்வையைச் செலுத்த வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணி கோரியுள்ளது.

தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்துள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வை.கோபாலசா மியை நேற்றுமுன் தினம் சந்தித்தபோது இந்தக் கருத்தை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது இருக்கின்ற இலங்கை அரசியல் நிலைமைகள் தொடர்பாக எடுத்துரைப்பதோடு குறிப்பாக மலையக அமைப்புக்கள் வட-கிழக்கு அமைப்புகளோடு ஒன்றுசேர்ந்து சிறுபான்மைத் தமிழ்மக்கள் உரிமை இழந்த தமிழ்மக்கள் என்ற ரீதியி லேயே ஒன்றுசேர்ந்து செயல்பட வேண்டிய காலத்தின் கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆரம்பகாலம் தொடக்கம் இலங்கைத் தமிழர்களின் போராட்டம் அல்லது இலங்கைத் தமிழர்களின் அரசியல் ரீதியான் போராட்டங்களில் இந்திய அரசாங்கம் மிக அக்கறையோடு செயற்பட்டு வந்துள்ளது. ஆனால் இடைக்காலத்தில் இந்திய அரசாங்கம் ஒதுங்கியிருக்கும ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை மாற வேண்டும் என்றும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் குறிப்பிட்டார்.

அதில் குறிப்பாக தமிழகத்து அரசியல் தலைமைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து இந்திய அரசாங்கத்திற்கு உண்மை நிலைமையை எடுத்துச் சொல்லவேண்டும். அதற்கு ஒரு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கை விவகாரத்தில் இந்தியா அன்னியப்பட்டுப் போய்விடக்கூடாது என்பதை எடுத்துக்கூறினார்.

இதன்போது கருத்துரைத்த வை.கோபாலசாமி இந்திய வம்சாவளியினரும் வடக்கு-கிழக்கு தமிழர்களும் ஒன்றிணைந்து செயற்பட வந்தமை குறித்து தமது கருத்தை வெளியிட்டார்.

மலையக தமிழர்களோ இந்திய வம்சாவளித் தமிழ்க ளாக அங்கு வாழும் நம்முடைய தமிழ்மக்களே. வடக்கு -கிழக்கல் இருக்கும் தமிழர்களோடு உரிமைக்குப் போராடும் தமிழர்களோடு கரம் கோர்த்து நிற்கும் நிலைமை ஏற்பட டிருப்பது இருள் விலகி ஒளி உதயமாவதற்கான சரியான சமிக்ஞையாகவே உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

மலையக மக்கள் முன்னணியோ இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸோ இப்படிப்பட்ட புரிந்துணர்வோடு வடக்கு-கிழக்கு ஈழத் தமிழர்களோடு சேர்ந்து நிற்கும் காலம் உருவாகியுள்ளது. அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட் டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நீண்டகாலமாக ஒதுங்கி இருந்த நிலைமாறி இப் பிரச்சினை என்பது வம்சாவளித் தமிழர்களுக்கல்ல என்ற நிலையில்லாமல் இலங்கைத் தமிழர்களோடு ஒருங்கி ணைந்து எதிர்காலத்தில் தங்களுடைய நலன்களை பாதுகாத்துக்கொள்ள ஒரு அடித்தளக் கட்டமைப்பு உருவாகி இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-7)

## முதல் சுற்றுப் பேச்சு நோர்வேயிலேயே! புலிகளின் உறுதியான நிலைப்பாடு இது

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுக்கள் நோர்வேயில மட்டுமே நடைபெறவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டில் எந்தவிதமான விட்டுக்கொடுப்பிற்கும் இடம் இல்லை என்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் மிக உறுதியாக இருப்பதாகத் தெரியவருகின்றது.

பேச்சுக்கான முன் ஆயத்தங்கள் இடம்பெற முன்னரே இனவாதக் கட்சிகளை திருப்திப்படுத்தும் நோக்கில் ஆசிய நாடு ஒன்றில்த்தான் பேச்சு என்று அரசு தலைமை நிபந்தனை விதித்தமை விடுதலைப் புலிகள் தரப்பில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் நோர்வேயில தான பேச்சு என்ற விடயத்தில் எந்தவொரு விட்டுக்கொடுப் பினையும் செய்ய விடுதலைப் புலிகள் தயாராக இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

"பேச்சுகளுக்கான இடம் குறித்து நிபந்தனையுடன் கூடிய அறிவிப்பை முதலில் விடுத்து நிலைமையை சிககலாக்கியது ஸ்ரீலங்கா அரசு தரப்பு தான். எனவே அனுசரணைப் பணியில் ஈடுபட்டிருக்கும் நோர்வே தான் இதற்குப் பொருத்தமான இடம் என விடுதலைப் புலிகள் கூறுவதில் எந்தவொரு மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

அதேநேரம் ஆசிய நாடு ஒன்றில்தான் பேச்சுக்கள் என நபநதனை விதித்த ஸ்ரீலங்கா அரசு தற்போது அதிலிருந்து இறங்கி வந்து பேச்சுகள் நோர்வே தவிர்ந்த வேறொரு ஐரோப்பிய நாட்டில் என புதிய விளக்கம் அளித்திருப்பது சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத் திடம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளதாகவும் தெரியவரு கின்றது.

ஆனால் முதல் சுற்றுப்பேச்சுகள் நோர்வேயிலேயே என்ற தமது நிலைப்பாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைப்பீடம் உறுதியாகத் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது. (து)

## பொலிஸார் குறித்த செய்திகளை— எச்சரிக்கையுடன் வெளியிட வேண்டும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் விளக்கமறியலில் உள்ள 3 பொலிஸார் குறித்த செய்திகளை ஊடகங்கள் எச்சரிக்கையாக வெளியிட வேண்டும் என்று பொலிஸ் ஆய்வாளர்கள் சங்கத் தலைவர் தாலே குணரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தமிழீழ நீதித்துறை, தமிழீழ காவல்துறை என்று அழைக்கப்படுவதை ஊடகங்கள் அங்கீகரிக்கக்கூடாது. ஊடகத் துறையில் ஒரு பகுதியினர் விடுதலைப் புலிகளால் 3 சிறிலங்கா பொலிஸார் கடத்தப்பட்டதை நியாயப்படுத்துவது போல் எழுதுகின்றனர்.

பொலிஸாரைக் கைதுசெய்ய புலிகளுக்கும் அவர்களின நீதிமன்றங்களுக்கும் அதிகார்ம் ஏதும் இல்லை. மூன்று பொலிஸாரையும் விடுவிக்கவேண்டும் என்று கண்காணிப் புக்குழுத் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்டும் கூட வலியுறுத் தியுள்ளார்.

கடந்த செப்டம்பர் 11 ஆம் திகதி புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்த ஹக்ரூப் ஹொக்லண்ட் இதை வலியுறுத்தியதோடு கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தார். இதுபோன்ற நடவடிக்கைகளை விடு தலைப் புலிகள் தொடர்ந்து செய்யாதிருக்கும் வகையில் ஊடகங்கள் செய்திகளை வெளியிடவேண்டும் என்றார். (த)

## மகாராஜா நிறுவன அதிபர் கொலைச்சதி

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசை பொதுநலவாய நாடுகள் ஒலிபரப்பாளர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

மகாராஜா நிறுவனத்தின் அதிபர் ராஜமகேந்திரனை படுகொலை செய்வதற்கு சதித்திட்டமிட்டவர்கள் அதில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவையும் சம்பந்தப் படுத்த முயன்று வருகிறார்கள் என்று நிறுவனத்தின் மனித வள அபிவிருத்தி பணிப்பாள பிரியந்த சேரசிங்க தெரி வித்தார்.

தன்னைக் கொல்வதற்கான சதிபற்றி தெரியவந்ததுமே ராஜமகேந்திரன் அதுபற்றி நவம்பர் இறுதி வாரத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் தெரிவித்திருந்தார். ஜனாதிபதி அதனைப் பொலிஸ்மா அதிபருக்கு கூறி நடவடிக்கை எடுக்கும் படி கேட்டிருந்தும் அதுபற்றி பெரிதாக எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. கடந்த ஞாயிறன்று சண்டேலீடர் பத்திரிகை மேற்படி சதிபற்றி முழுமையான செய்தியை வெளியிட்டிருந்தது. இதன்படி தென்னிலங்கை அரசியல்வாதியொருவர் பாதாள உலகக் கோஷ்டியினதும் சிறைக்கைதிகள் சிலரதும் ஒத்துழைப்புடன் கொலைக் கான சதித்திட்டம் தீட்டப்பட்டதாக இருந்தது.

அப்போது மேற்படி சதியை தென்னிலங்கை அரசியல் வாதுயன்றி பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவே செய் தாா என்ற வகையில் விடயத்தை திசை திருப்பும் சதி ஒன்றும் நடைபெற்றுள்ளது.

ஆனாலும் பிரதமருக்கும் மகாராஜா அதிபருக்கும் நீண்டகாலமாக நல்லுறவு இருந்துவந்துள்ளதையும் அத்த கையை ஒரு கதை நம்பத் தகுந்ததல்ல என்று மகாராஜா பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், சில வாரங்கள் மௌனம் சாதித்த சீ.ஐ.டீ.யினர் பின்னர் தம்முடன் தொடர்புகொண்டு இச் சதிபற்றிய அறிக்கை ஒன்றை வெளியிடுமாறு கேட்டிருந்தனர்.

எனவே, நிலைமையை மக்கள் அறிய செய்யும் விதத் தில் செய்தியாளர் மாநாட்டை நடத்தியதாகக் கூறினார்.

இக் கொலைச் சதி பற்றி விரைந்து நடவடிக்கை எடுக்கு மாறு பொதுநலவாய நாடுகளின் ஒலிபரப்பாளர் சங்கம் இலங்கை அரசைக்கேட்டுக்கொண்டுள்ளது. (அ-6)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



நான் குறையுடையவன். நான் ஆண். நான் பெண். நான் பாவி. நான் மனம். எனக்கு சிந்தனை உண்டு. நான் சிந்திக்கிறேன் என்பவையெல்லாம் வெறும் மன மயக்கங்கள். நீ சிந்திப்பதே இல்லை. உனக்கு உடல் ஒருபோதும் இருந்ததே இல்லை. நீ குறை உடையவனாக இருந்ததே இல்லை. யாரையும் தீயவன் என்று சொல்லாதே. 'நீ நல்லவன். இன்னும் நல்லவனாக இரு' என்று சொல்.

சுவாமி விவேகானந்தர்

## நீர்வேலியில் வீடொன்றின் மீது நேற்று அதிகாலை குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப்பகுதியில் உள்ள துரைசாமி கோடீஸ்வரன் என்பவரது வீட்டின் மீது நேற்று அதிகாலை கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

நீர்வேலிக் கரந்தன் சந்தியில் உள்ள அவரது வீட்டின் மீது அதிகாலை 5.30 மணியளவில் இக் கைக்குண்டு வீசப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

அவரது வீட்டிற்குக் காலையில் சென்ற சிலர் அவரின் பெயரைக் கூறி அழைத்துள்ளனர். அவரும் மனைவியும் வீட்டின் வெளியே வந்ததும் கைக்குண்டு அவர் மீது வீசப்பட்டுள்ளது.

இதையடுத்து தனது மனைவியையும் கூட்டிக்கொண்டு வீட்டின் பின்புறம் அவர் ஓடியுள்ளார். பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்ததைத் தொடர்ந்து குண்டை வீசியவர்கள் தாங்கள்வந்த மோட்டார் சைக்கிளில் அருகில் உள்ள இராணுவ முகாமை நோக்கி தப்பியோடியாதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் வீடு சேதமடைந்ததுடன் அவருடைய மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது. (ச-4)

## கொக்குவிலில் கிரனைட் வீச்சு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சந்திப் பகுதியில் நேற்று மாலை இராணுவத்தினர் மீது வீசப்பட்ட கிரனைட் ஒன்று வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டதாக படைத்தரப்புத் தெரிவித்துள்ளது.கே.கே.எஸ். வீதியால் ரோந்து சென்ற படையினர் கொக்குவில் சந்தியை அண்மித்த போது கிரனைட் வீச்சு இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## கரவெட்டிவாசி லண்டனில் கொலை

(மருதங்கேணி)

கரவெட்டிவாசியான இளம் குடும்பஸ்தர் ஒருவர் லண்டனில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கரவெட்டி கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவகுமார்(வயது-38) என்பவரே கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டவராவார்.

அவரது குடும்பத்தினரும் லண்டனிலேஉள்ளனர். இவர் கொலை செய்யப்பட்டமைகான காரணம் எதுவும்தெரிய வரவில்லை என உறவினர் கள் தெரிவித்தனர். (ச-35)

## உடுவிலில் இளைஞன் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

உடுவிலில் நேற்று முன்தினமிரவு இளைஞன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். உடுவில் ஆலடி வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள கடைச்சல் தொழிற்சாலையில் படுக்கையில் இருந்த சமயமே அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த தங்கராஜன் பிரதீஸ்குமார் (வயது-28) என அடையாளம் காணப்பட்டார். நேற்றுக் காலை சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாக மாவட்ட நீதிவான் சறோஜினி இளங்கோவன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் மரண விசாரணையின் பொருட்டு சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (ச-39)

## பத்திரிகை நிறுவனத்தில் இராணுவம் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இயங்கும் யாழ்.தினக்குரல் பத்திரிகை அலுவலகத்தில் இராணுவத்தினர் நுழைந்து பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று யாழ்.சிவன் கோவிலடியில் உள்ள இராணுவக் காவல் அரண்மீதுகைக்குண்டுவீசப்பட்டது. எனினும் அக்குண்டு வெடிக்கவில்லை.

அவ்வெடிக்காத குண்டை செய்தியாளர் ஒருவர் படம் பிடித்ததாகவும் அவர் அப் பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவித்தே இத் தேடுதல் மேற்கொள்ளப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பத்திரிகை நிறுவனத்தினுள் நுழைந்த இராணுவத்தினர் அங்கிருந்த அனைவரையும் வெளியேற்றிய பின்னர் செய்திப் பிரிவு, அச்சுப்பிரிவு உட்பட்ட பகுதிகளில் பாரிய தேடுதலில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-4)

### நகரசபை ஊழியர் ...

குத்திரும்பியதாகவும் மறு நாள் சடலமாக மீட்கப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை மாவட்ட நீதிவான் அரியநாயகம் சடலத்தைப் பார்வையிட்டதுடன் பிரேதபரிசோதனைக்காக சடலத்தை மந்திகை மருத்துவ மனையில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள் மேற்கொண் டார்.

சடலத்தில் 15 இற்கும் மேற்பட்ட வெட்டுக் காயங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மரண விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ச-35,52,43,101)

### இராணுவத்தளபதி...

தெரிவித்தன. இதேவேளை ஓமந்தைப் பகுதிக்கு இராணுவத் தளபதி செல்வதாக இருந்த போதும் பாதுகாப்புக் காரணங்களுக் காக அவர் அங்கு செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)

### தமிழர்கள் கைதாவதைக் கண்டித்து ...

பெருமளவான தமிழ் மக்கள் கைது செய்யும் வன்முறை நடவடிக்கையை அரசாங்கம் கைவிட வேண் டும் என்று ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர் வலியுறுத்தினர்.

அவசரகாலச் சட்டத்தை நீக்க வலியுறுத்தும் பதாகைகளை ஏந்தி முழக்கங்களையும் அவர்கள் எழுப்பினர். இவ் ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என். ரவிராஜ் ,சுரேஸ் பிரேமச்சந்திரன் , மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் தலைவர் என பலரும்கலந்துகொண்டனர். (ச-4)

### இராணுவத்தின் தாக்குதல்களால் மரண பீதியில் ...

கண்மூடித்தனமன துப்பாக்கி பிரயோகத்தினால் முதியோர், பெண்கள், சிறுவர்கள் என 40 இற்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டுள்ளனர்.

1.12.2005 தொடக்கம் 05.01.2006 வரையான ஒரு மாத காலப் பகுதிக்குள் மட்டும் 22 பேர் கொல்லப்பட்டதாக இளம்பரிதி கண்காணிப்புக்குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுற்றிவளைப்பு தேடுதல் என ஸ்ரீலங்கா படையினர் மேற்கொள்ளும் தேடுதல்களின் போது பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர்.

கைது செய்யப்பட்டு கடத்தப்படும் அப்பாவிப் பொதுமக்கள் குறித்து எவ்வித தகவல்களும் வெளிவருவதில்லை இதுவரை 45க்கும் மேற்பட்டவர்கள் இராணுவத்தினால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

சுதந்திரமான போக்குவரத்திற்கு இடர் ஏற்படுத்தும் வகையில் இராணுவ நோக்கில் வீதித்தடைகளை ஏற்படுத்துவதால் பொதுமக்கள் வெள்ளங்கள் நிறைந்துள்ள சுற்றுவழி வீதிகளை நாடவேண்டியுள்ளது.

வலி.மேற்கு, வடமராட்சி வடக்கு பிரதேசங்களில் கடற்றொழில் செய்வதற்கு இராணுவத்தினர் தடை விதித்து அதுபற்றி வெளிப்படையாகவே கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவித்துள்ளனர். இதனால் பல மீனவக் குடும்பங்கள் பசி,பட்டினியை எதிர் நோக்கியுள்ளன.

படையினர் பொதுமக்களைக் கொண்டு வீதியோர வேலிமரங்களையும், பனைகளையும் கட்டாயப் படுத்தி தறிக்கின்றனர். அடையாள அட்டைகள், கையடக்க தொலை பேசிகள், உடைமைகள் மக்களிடம் இருந்து படையினரால் பறித்தெடுக்கப்படுகின்றது என சுட்டிக்காட்டினார்.

மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்கள், துப்பாக்கி பிரயோகங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் அவர்களின் வீடுகள் சோதனையிடப்பட்டு அவர்கள் மீது வீண் பழி சுமத்தும் நோக்குடன் கைக்குண்டுகள், ஆயுதங்கள் வைக்கப்பட்டு எடுக்கப்பட்டு அச்சுறுத்தப்படுவதனால் மக்கள் மரண பீதியுடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

இத்தகைய அத்துமீறல்கள் போர் நிறுத்த உடன்படிக்கையின் விதிகளை முற்றாக மீறப்பட்டுள்ள தாக இளம் பரிதி சுட்டிக்காட்டினார். யாழ். மாவட்டத்தில் பொதுமக்கள் அச்சமடைந்து மரண பீதிக்குள் தள்ளப்பட்டு அவலங்கள் அதிகரித்துவருவதையும்படையினரதுமனிதஉரிமை மீறல்செயற் பாடுகளையும் அனைத்துலகத்திற்கும் வெளிப்படுத்தப் படுவது அவசியம் எனவும் படையினரது அத்து மீறல்கள் நிறுத்தப் பட்டு மக்களது இயல்புவாழ்க்கை திரும்புவதற்கு போர்நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இளம் பரிதி வேண்டு கோள் விடுத்தார் . (ச)

### புலிகளைப் பேச்சு மேசைக்கு ...

இச்சந்திப்பின்போது இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டினை அமைச்சர், அமெரிக்க ராஜாங்க செயலாளருக்கு விளக்கிக்கூறும் போதே இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

வாஷிங்டனும் இலங்கைக்கான இடைத்தலைமை நாடுகளும் அதாவது ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமை பொறுப்பில் இருக்கும் பிரிட்டன், ஜப்பான், அமெரிக்கா, நோர்வே ஆகிய நாடுகள் விடுதலைப்புலிகளை பேச்சு மேசைக்கு கொண்டு வருவதற்கான ஆயத்தப் பணிகள் சிலவற்றை செய்துள்ளனர்.

அவை அவர்களை பேச்சு மேசைக்கு கொண்டுவராது என்றார் மங்கள.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்து 7 வாரங்கள் தான் ஆகின்றன. இவ்வேழு வாரங்களில் சமாதானப் பேச்சை ஆரம்பிக்க வருமாறு விடுதலைப்புலிகளுக்கு 6 தடவை அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன் நோர்வே குறித்து சிங்கள மக்களின் பார்வையில் பிரச்சினை இருக்கின்ற போதிலும் நோர்வே மத்தியஸ்தராக தொடர வேண்டும் என்றும் ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார்.

ஆகவே விடுதலைப்புலிகள் 25 வருடத்திற்கு முன்னர் தாம் இருந்த நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருக்கின்ற போதும் நாம் கீழ் இறங்கி வந்துள்ளோம்.

தனி நாடு ஒன்றே தமது நிலைப்பாடு என்று புலிகள் கூறுகின்றார்கள்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் கையெழுத்திடப்பட்ட ஒஸ்லோ உடன்படிகையினை அவர்கள் நிராகரிக்கின்றார்கள். எமது அரசு மிகவும் நெகிழ்வுடன் இருக்கின்றது. அது அமைதிக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என மங்கள சமரவீர அமெரிக்காவுடன் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகள் குறைந்தது ஒரு சிறுதளவு நெகிழ்வுத் தன்மையைக் காண்பிக்க தயாரானாலும் சமாதானத்துக்காக எமது அரசாங்கம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்கத் தயாராக இருக்கின்றது என அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப்புலிகள் நிதி சேகரிப்பதைக் கண்டித்த வெளிவிவகார அமைச்சர் மங்கள நேற்றுக் காலை அரசுத் துறை அலுவலகத்தில் பயங்கரவாத தடுப்புப் பிரிவில் துணை இணைப்பாளரைச் சந்தித்து இது குறித்து ஆதாரபூர்வமான தகவல்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார். (ச-4)


## திருமறைக் கலாமன்றம்

40 ஆவது ஆண்டு நிறைவில் கலைப்பயில்வில் ஓர் புத்துருவாக்கம்

கலைத்தூது அழகியல் கல்லூரி

KALAITHUTHU COLLEGE OF AESTHETIC

1988 ஆம் ஆண்டில் இருந்து எமது மன்றத்தால் நடத்தப்பட்டு வந்த 'கவின் கலைகள் பயிலகம்' இவ்வாண்டு (2006) முதல் 'கலைத்தூது அழகியல் கல்லூரி' யாக இயங்கிவிருக்கின்றது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். கலைசார்ந்த பாடங்களை செயல்திறனுடன் பயில்வதற்கும் தகுதிச் சான்றிதழ்களை பெறுவதற்கும் ஏற்றவகையில் இதன் பாடவிதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

இக் கல்லூரியில் பயில்வதற்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பாட விதானங்கள்

| பிரதான பாடங்கள் | சிறப்புப் பாடங்கள் |
|---|---|
| ★ வாய்ப்பாட்டு | ★ கூத்து |
| ★ நடனம் (பரதம்) | ★ கண்டிய நடனம் |
| ★ நடனம் (கதகளி) | ★ சினிமாவும், தொழில்நுட்பமும் |
| ★ வீணை | |
| ★ வயலின் | |
| ★ கிற்றார் | |
| ★ ஓர்கன் (கீபோட்) | |
| ★ புல்லாங்குழல் | |
| ★ மிருதங்கம் | |
| ★ சித்திரம் | |
| ★ நாடகமும் அரங்கியலும் (நாடகப் பயிலகம்) | |

குறிப்புக்கள்;

- ★ ஒவ்வொரு பாடவிதானங்களுக்கும் ஒவ்வொரு குறிப்பிட்ட கலைத்திட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டு தரங்களின் அடிப்படையில் பயிற்சிகள் நடத்தப்படும்.
- ★ அறிமுறை,செய்முறை இருவகையிலும் வகுப்புக்கள் நடத்தப்படும்.
- ★ வார இறுதியிலும் (சனி ,ஞாயிறு) மாலை நேரங்களிலும் வகுப்புக்கள் நடத்தப்படும்
- ★ வட இலங்கை சங்கீதசபை ,க.பொ.த.பரீட்சைகள் போன்றவற்றிற்குத் தோற்றுவோருக்கு இப் பயில்வுகள் 'செய்முறை' சார்ந்து அதிகம் உதவுவதாக இருக்கும்.
- ★ சிறப்புப் பாடங்களுக்கு விசேட விரிவுரையாளர்கள் வருவிக்கப்படுவதுடன் விசேடமான கால ஒழுங்கில் பயிற்சிகள் நடத்தப்படும்.
- ★ அனைத்துப் பாடங்களுக்குமான விண்ணப்ப முடிபுத் திகதி 14.01.2006 ஆகும்.
- ★ விண்ணப்பப் படிவங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

238 ,பிரதான வீதி,யாழ்ப்பாணம்
தொலை பேசி :021 222 2393

பொதுச்செயலாளர்
திருமறைக் கலாமன்றம்

(ட.அ.116)











இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது